மலர்-5 இதழ்-102 நவம்பர் 16-30 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

மாதமிருமுறை

e- magazine
www.aanmeegamalar.com



நிலவறையில் வாழும் பாம்பு
பெண்வம்சத்துக்கே அனுமதி

# நாகராஜன் கோவில்

# கிரகங்களை வசியம் செய்யும் வேர்கள்

கிரகதோஷம் உள்ளவர்கள் ஒருசில வேர்களை பயன்படுத்தி சாதகமான பலன்களை அடையலாம்.

அந்தவகையில்...

சூரியன்.......... வில்வ வேர்
சந்திரன் .......... பால்மரத்தின் வேர்
செவ்வாய் ........ நான்னாரி கொடிவேர்
புதன் .............. ஆல மரவேர்
குரு ................ வெள்ளை பேராமுட்டிவேர்
சுக்கிரன் .......... சிம்மபுரச மரவேர்
சனி ................ ஆலமரவேர்
ராகு................ சந்தனவேர்
கேது .............. அமுக்கினாங்கிழங்கு வேர்

மேற்கண்ட கிரகங்கள் சாதகங்களில்பாதிப்பு அடைந்து திசா, புத்தி நடந்தால் பாதிப்பு ஏற்படும் அந்த காலங்களில் மேற்கண்ட வேர்களை தாயத்துகளில் பயன்படுத்தி நன்மை அடையலாம்.



# ஆன்மிக மகளிர்

❖ திருமணம் ஆன பெண்கள் ஒரே ஒரு விரலில் மட்டுமே மெட்டி அணிய வேண்டும். ஒரே காலில் இரண்டு மூன்று அணிய கூடாது. அணிவதால் ஆரோக்கியம் மற்றும் கணவனின் வளர்ச்சி (உடல், வருமானம்) பாதிப்பு அடையும்.

❖ கர்ப்பமான பெண்கள் உக்ர தேவதைகள் இருக்கும் கோவிலுக்கு போகக்கூடாது.

❖ பெண்கள் கிழக்கு திசையை நோக்கி குங்குமத்தை இரண்டு புருவ மத்தியிலும் உச்சந்தலையிலும் இட்டுக்கொள்ளவேண்டும். திருமணம் ஆகாதவர்கள், உச்சந்தலையில் இட்டுக்கொள்ள கூடாது.

❖ கோவில்களில் பிரஸாதமாக தரப் படும் துளசியை தலையில் வைத்துக் கொள்ளக்கூடாது.

❖ அமாவாசை, தவசம் ஆகிய நாட்களில் வாசலில் கோலம் போடக் கூடாது.



# யாத்திரிகர்களை மேளதாளத்துடன் வரவேற்ற இராமேஸ்வரம்

அக்காலத்தில் நமது முன்னோர்கள் காசியாத்திரை சென்று திரும்பினால் அவர்களை அரசனே நேரில் கௌரவிக்கும் பழக்கம் இருந்தது.

இதில் ஒருபடி மேலாக, காசி யாத்திரையை முறையாகத் தொடங்கியவர்கள், அதை நிறைவு செய்யும்வகையில் இராமேஸ்வரம் ராமநாதருக்கும், விசுவநாதருக்கும் அபிஷேகம் செய்ய, கங்கை தீர்த்தத்தோடு வருவது வழக்கமாக இருந்தது.

இவ்வாறு வருவோரை இராமேஸ்வரம் கோவில் நிர்வாகம் மேளதாளங்கள் முழங்க, நடன மாதர்கள் ஆடியபடி மரியாதை தெரிவிக்க, பூர்ண கும்ப மரியாதையோடு வரவேற்கும் வழக்கம் முன்பு இருந்துள்ளது.

ஆனால் இன்று வட இந்தியர்கள் நாள்தோறும் கங்கை தீர்த்தத்தைக் கொண்டு வருவதாலும், கங்கையிலிருந்து கொண்டு வரவேண்டிய தீர்த்தத்தை ஆலயத்திற்குள்ளேயே குப்பிகளில் அடைத்து விற்பனை செய்வதாலும் அந்த வழக்கம் தற்போது வழக்கொழிந்து போனது.



# 18 இடங்களில் பூசும் திருநீற்று மகிமைகள்

அறுகம்புல்லை உண்ணுகின்ற பசுமாட்டின் சாணத்தை எடுத்து உருண்டையாக்கி வெயிலில் காயவைக்க வேண்டும். பின் இதனை உமியினால் மூடி புடம் போட்டு எடுக்க வேண்டும். இப்போது இந்த உருண்டைகள் வெந்து நீறாகி இருக்கும். இதுவே உண்மையான திருநீறாகும்.

இந்த திருநீற்றை மூட்டுவலி உள்ள இடங்களில் தேய்த்து வந்தால் மூட்டில் உள்ள நீர்த்தன்மையை உறிஞ்சி எடுத்துவிடும். இதனால்தான் நம் முன்னோர் திருநீற்றை உடலின் குறிப்பிட்ட பாகங்களில் பூசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

மாடு அறுகம்புல் போன்ற பலவகையான புல்வகைகளை உண்டு தனது உடலைத் தேற்றிச் சாணம் போடும். அச்சாணம் தீயிலிடப்படும் போது இரசாயண மாற்றங்கள் ஏற்படும். இந்த கலவைக்கு மிகச் சிறந்த நீர் உறிஞ்சும் தன்மை உள்ளது.

இதனால்தான் மனித உடலின் பதினெட்டு இடங்களில் இந்த சுத்தமான திருநீற்றை பயன்படுத்த வேண்டும் என்ற சம்பிரதாயத்தை உருவாக்கினர்.

உச்சந்தலை; நெற்றி; மார்புப் பகுதி; தொப்புளுக்கு சற்று மேல்; இடது தோள்பட்டையில்; வலது தோள்பட்டையில்; இடது கை மற்றும் வலது கையின் நடுவில்; இடது மற்றும் வலது மணிக்கட்டில்; இடது மற்றும் வலது இடுப்புப் பகுதியில்; இடது மற்றும் வலது கால் நடுவில்; முதுகுக்குக் கீழ் பகுதி; கழுத்து முழுவதும்; இரண்டு காதுகளின் பின்புறம் உள்ள குழியில்.

இவ்வாறு சுத்தமான திருநீற்றை பூசினால் உடலில் சேரும் கழிவு நீரை உறிஞ்சி எடுத்துவிடும். இந்த அருமருந்தான திருநீற்றை முன்னோர் பயன்படுத்தினர்.



# எண்ணெய் தேய்த்து குளித்தல்

இந்துமத சாஸ்திரப்படி எந்த நாளாக இருந்தாலும் காலை 8.30 மணிக்கு முன்பும் மாலை 5.00 மணிக்கு பின்பும் எண்ணெய் தேய்த்து நீராடக்கூடாது; ஆண்கள் புதன் மற்றும் சனிக்கிழமைகளிலும், பெண்கள் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் (தலையில் மட்டுமாவது) எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும்.

இறந்தவர்கள் துக்க வீடு, இடுகாடு, சுடுகாட்டுக்கு சென்று வந்த தினத்தில் மற்றும் அமாவாசை தினத்தில் எண்ணெய், சோப்பு, சீயக்காய் தேய்த்து நீராடக்கூடாது. வெந்நீரிலும் நீராடக்கூடாது. மீறி இந்த நேரங்களில் இத்தகைய குளியல் செய்தால் பித்ருக்களின் சாபத்திற்கு ஆளாவோம்.

# குண்டலினியோகம் செய்ய யார் தகுதியானவர்?

குண்டலினி சக்தி உடம்பில் சக்தி அம்சமாக உள்ளது (மூலாதாரம்). உச்சந்தலையில் சிவா அம்சம் (துரியம் அல்லது ஆக்கினை) உள்ளது. சக்தி சிவத்தைச் சேரும் இன்பமே பேரின்பமான குண்டலினி யோகம். இந்த அனுபவத்தை சித்தர்கள் நிறையவே தங்கள் பாடல்களில் பதிந்துள்ளனர்.

சைவ உணவோடு, நெறியான வாழ்வும் உடையவர் இந்த குண்டலினி யோகத்தை செய்யலாம். இளைஞர்களில் சன்னியாச வாழ்வை விரும்புபவர்களும், அனைத்து ஆசைகளையும் துறந்த அறுபது வயதுக்கு மேல் உள்ளவர்களும் இந்த யோகம் செய்ய தகுதி உடையவர்கள்.



# கிரக தோஷத்தை போக்கும் குளியல் வழிமுறைகள்

பொதுவாக தோஷங்கள் இரண்டுவகையில் ஏற்படும், அறியாமல் செய்யும் காரண காரியங்களால் ஒருதோஷமும், அறிந்தே செய்யும் காரியங்களால் மற்றொரு தோஷமும் ஏற்படும்.

இதுபோன்ற தோஷங்களை ஒருசில பரிகாரங்கள் மூலம் தீர்த்துவிடலாம். அந்தவகையில் அறிந்தும் அறியாமலும் செய்யும் ஒருசில தோஷத்தை நாம் அன்றாடம் குளிக்கும் வழிமுறைகளின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம்.

இதுபோன்ற குளியலைக்கூட ஒருசில காரணங்களுக்கு என்று ஒதுக்கிவைத்துள்ளனர்.

- நித்யம்: காலையிலேயே குளிப்பது:
- நைமித்திகம்: சவ ஊர்வலத்துக்குப் பின் சென்று குளிப்பது:
- காம்யம்: குளத்தில் குளிப்பது:
- க்ரியாங்கம்: வழிபாட்டுக்கு முன் குளிப்பது:
- மலாபகர்ஷணம்: எண்ணெய் தேய்த்துக் குளிப்பது:
- க்ரியாஸனம்: புண்ணிய தீர்த்தங்களில் குளிப்பது




இதுபோன்று ஒருசில காலநேரத்துக்கு ஏற்ப சூழ்நிலைக்கு ஏற்ப குளியலின் பெயர் மாறுபடும்.

தினமும் குளிக்கும் நீரில் சில இயற்கை பொருட்களை கலந்து குளிப்பதன் மூலமாக கிரக தோஷங்கள் நீங்கும் என்று ஜாதகத்தில் கூறப்படுகிறது...

### சூரிய தோஷம் நீங்க:

சிகப்பு மலர்களையோ அல்லது குங்குமப்பூவையோ குளிக்கும் நீரில் சிறிதளவு போட்டு பின்பு நான்கைந்து குவளைகள் அந்த நீரில் குளித்துவிட்டு பின் வழக்கம் போல சாதாரண நீரில் குளிக்கலாம். இதனால் சூரிய பகவானால் ஏற்படும் தோஷங்கள் விலகும்...

### சந்திர தோஷம் நீங்க:

அழகுக்காக பலர் தயிரை முகத்தில் பூசிக்கொள்வது வழக்கம். சந்திரனால் ஏற்படும் தோஷத்தை போக்கவும் இதை தான் செய்யவேண்டும். குளிப்பதற்கு முன்பு சிறிதளவு தயிர் எடுத்து அதை உடல் முழுக்க தடவி பின் குளித்துவந்தால் சந்திரனால் ஏற்படும் தோஷங்கள் விலகும்.

### செவ்வாய் தோஷம் நீங்க:

செவ்வாய் தோஷம் இருப்பதால் திருமணம் தடைபடுகிறது, திருமணத்திற்கு பிறகும் பல பிரச்சனைகள் வருகிறது என்று பலர் கவலைப்படுவதுண்டு. இதற்கு சிறந்த குளியல் பரிகாரம் என்னவென்றால், வில்வ கொட்டையை சிறிதளவு எடுத்துக்கொண்டு அதை நன்கு பொடி செய்து, குளிக்கும் நீரில் கலந்து அதில் ஒரு நான்கைந்து குவளைகள் குளித்துவிட்டு பின் வழக்கம் போல சாதாரண நீரில் குளிக்கலாம். இதனால் செவ்வாய் தோஷம் விலகும்...



ஆன்மிகமலர் மெயில் புக்



### புதன் தோஷம் நீங்க:

புதன் தோஷம் நீங்க கங்கை நீரோ அல்லது கடல் நீரோ தேவை; இரண்டும் கிடைக்காதபட்சம் கடல் நீருக்கு பதிலாக நிலத்தடி நீரில் சிறிது கல் உப்பு கரைத்துக்கொள்லலாம்; உப்பு தூள் உபயோகிக்கக்கூடாது. சிறிதளவு மஞ்சள் கடுகு எடுத்துக்கொண்டு அதில் தேன் கலந்து பின் அதை சிறிதளவு கடல் நீரிலோ அல்லது கங்கை நீரிலோ கலந்து பின் அனைத்தையும் நாம் குளிக்கும் நீரில் கலக்க வேண்டும். பின் இந்த நீரில் குளிப்பதன் மூலம் புதனால் ஏற்படும் தோஷங்கள் விலகும்...

### வியாழன் (குரு) தோஷம் நீங்க:

கருப்பு ஏலக்காய் சிறிதளவு எடுத்துக்கொண்டு அதை நீரில் நன்கு கொதிக்கவைத்து பின் அதை குளிக்கும் நீரில் கலந்து குளித்துவருவதன் மூலம் வியாழனால் ஏற்படும் தோஷங்கள் விலகும்...

### சுக்கிர தோஷம் நீங்க:

சுக்கிர தோஷம் நீங்க, பச்சை ஏலக்காயை சிறிதளவு எடுத்துக்கொண்டு அதை நீரில் நான்கு கொதிக்கவைத்து பின் அதை குளிக்கும் நீரில் கலந்து குளித்துவர வேண்டும்...

### சனி தோஷம் நீங்க:

சனி தோஷம் நீங்க, கருப்பு எள் சிறிதளவு எடுத்துக்கொண்டு அதை நீரில் நான்கு கொதிக்கவைத்து பின் அதை குளிக்கும் நீரில் கலந்து குளித்துவர வேண்டும்...

### ராகு தோஷம் நீங்க:

ராகு தோஷம் நீங்க, நாட்டு மருந்துக்கடைகளில் கிடைக்கக்கூடிய மகிஷாக்ஷியை சிறிதளவு எடுத்துக்கொண்டு அதை நீரில் நான்கு கொதிக்கவைத்து பின் அதை குளிக்கும் நீரில் கலந்து குளித்துவர வேண்டும்...

### கேது தோஷம் நீங்க:

கேது தோஷம் நீங்க, அருகம்புல்லை சிறிதளவு எடுத்துக்கொண்டு அதை நீரில் நான்கு கொதிக்கவைத்து பின் அதை குளிக்கும் நீரில் கலந்து குளித்துவர வேண்டும்.

## தமிழகத்தில் உள்ள பஞ்ச கிருஷ்ண தலங்கள்

தமிழகத்தில்கிருஷ்ணர் மூலவராக இருந்து அருள் தரும் முக்கிய தலங்கள் ஐந்து உள் ளது.

### 1. திருக்கண்ணங்குடி

இத்தலம் திருவாரூரில் இருந்து 18.0கி. மீல் உள்ளது. மூலவர் லோகநாதப் பெருமாள், தாயார் லோகநாயகி. வெண்ணெயில் இருந்து வெளிப் பட்டு கண்ணன் குடி அமர கண்ணன்குடி ஆனது.

### 2. திருக்கண்ணமங்கை

திருவாரூரில் இருந்து 6 கி.மீ. பிருகு முனிவரின் மகள் கண்ண மங்கையை கிருஷ்ணர் மணம் செய்த தலம்.

### 3. திருக்கோவிலூர்

விழுப்புரத்திலிருந்து 36 கி.மீ. மூலவர் திரிவிக்ரமர், தாயார் பூங்கோவல் நாச்சியார். மிருகண்டு முனிவருக்கு வாமனர் கோலத்தில் காட்சியளித்த தலம்.

### 4. திருக்கண்ணபுரம்

திருவாரூரிலிருந்து 19 கி.மீ. கண்வ முனிவருக்கு அதிசுந்தரனாக காட்சி நல்கியதால் கண்வபுரம் என்றாகி பின் கண்ணபுரம் என்றானது மூலவர் சவுரிராஜன் தாயார் ஸ்ரீகண்ணபுரநாயகி.

### 5. திருக்கபிஸ்தலம்

கும்பகோணம்த்திலிருந்து 15 கி.மீ. மூலவர் கஜேந்திர வரதர். தாயார் லோக நாயகி. கஜேந் திரன் என்னும் யானையை முதலையின் பிடியில் இருந்து காப்பாற்றிய தலம். ஆக இந்த ஐந்து தலங்களும் *பஞ்ச கிருஷ்ண தலங்கள்* என்றுப் போற்றப்படுகின்றன.

தொகுப்பு: என்.எஸ்.சந்திரன்
வளசரவாக்கம், சென்னை.

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் மெயில் புக்

## கடவுளை யாரும் சுட்டிக்காட்டவில்லை

# வழிமுறைகளை மட்டுமே கூறியுள்ளனர்

கடவுள் இருக்கிறான் என்று அறிந்தவர்கள் கூறினாலும், கடவுள் இல்லை என்று அறியாதவர்கள் கூறினாலும், நமது தேடுதலை மட்டும் விட்டுவிடக்கூடாது.

ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதத்தில் கடவுள் அனுபவம் கிடைக்கும், கிடைத்திருக்கும், இதை மற்றவர்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களை புரியவைக்க முற்படக்கூடாது.

மகான்கள், ஞானிகள், சித்தர்கள், கடவுளை காணும் வழிமுறைகளை மட்டுமே சொல்வார்கள், "இவர்தான் கடவுள்" என்று எந்த மகானும் கடவுளை மற்றவருக்கு காட்டியதாக சரித்திரம் கிடையாது.

நாம் அறிந்த கடவுளை மற்றவர்களுக்கு கூற முற்பட்டால், அவர்கள் பார்வையில் நாம் பைத்தியக்காரனாகத்தான் தெரிவோம்.

இவர்தான் இறைவன் என்று சுட்டிக்காட்டிய பட்டினத்தாரும், பக்தப் பிரகலாதனும் மற்றவர் கண்களுக்கு பைத்தியக்காரனாகத்தான் தெரிந்தார்கள்.

கடவுளை அறியாதவரை செல்வ வாழ்க்கையில் திளைத்த பட்டினத்தாரை மதித்த மக்கள், சுகபோகம் மட்டுமே வாழ்க்கை இல்லை என்று அனைத்தையும் துறந்து, இதுதான் இறைவனை அடையும் வழி என்று, உடலை ஜடமாக்கி மனதை இறைவனிடம் செலுத்தி கோவணத்துடன் திரிந்த போது உறவுக்காரர்களே பித்து பிடித்தவன் என்ற பட்டத்தை மட்டுமே கொடுத்தனர், கடைசியில் அந்த பித்தனைத்தான் இன்று மிகப்பெரிய சக்தி வாய்ந்த சித்தனாக பக்தர்கள் போற்றுகின்றனர்.

இதுதான் கடவுள் என்று பிரகலாதன் கூறியதும், தூணை உடைத்து கடவுளை கண்டு, பிரகலாதனின் வேண்டுகோளுக்கு இணங்கி பெருமாள் இரணியனை தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டான்.

இந்த இரண்டு புராணங்களும் வெவ்வேறு பாதையில் கடவுளை சொன்னாலும் கூட... இறைவனை அடையும் எந்த வழிமுறைகளையும் நேரிடையாக சொல்லவில்லை.

உலகம் எனும் விளையாட்டுமைதானத்தில் ஒவ்வொருவரும் கடவுளைத் தேடும் கண்ணாம்பூச்சி விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறோம். கண்ணை மூடிக்கொண் டாலும் இறைவனின் வாசமும், அவனின் செய லையும் உற்றுக் கவனித்தால் நாம் கண்டிப்பாக கண்ணாம்பூச்சி ஆட்டத்தில் வெற்றி பெற்று கடவுளை கண்டுபிடித்துவிடலாம்.

தவறும் பட்சத்தில், விளையாட்டை தொடர்வது போன்று, பல பிறவிகள் எடுத்தாக வேண்டும். விளையாட்டை முடித்து பிறவியை தவிர்க்க நினைத் தால் கண்டிப்பாக வெற்றியை நோக்கி நாம் பயணிக்கலாம்.

நமது வாழ்க்கைமுறைக்கு ஒத்து வரும் மகான்கள், சித்தர் களின் வாழ்க்கை முறையை, அவர்கள் இறை வனை அடைய கடை பிடித்த நடை



முறைகளை கடைபிடித் தாலே நாம் இறை வனை எளிதாக அடைந்து விடலாம்.



எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்
உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்
வாட்சப்பில் பெற 08825844033
இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# அலைபாயும் மனதை கட்டுப்படுத்த முன்னோர் கூறிய வழிமுறைகள்

மனம் தொடர்ந்து அலைபாய்ந்து கொண்டிருக்கிறதா, இந்த அலைபாயும் மனதை எளிதாக அடக்கிவிடலாம்,யோகம் தியானம் போன்றவற்றால் அலைபாயும் மனதை அடக்குவது மட்டுமின்றி, சித்தர்களின் பாடலுக்கு விளக்கத்தை அறிந்து படித்தாலும் மனம் தானாகவே அடங்கிவிடும்.

தான் என்ற அதிகார வாழ்க்கை வாழ்பவர் கள், வாழ்க்கையில் ஒருபிடிப்பு இல்லாமல் அவதிப் படுபவர்கள், கண்டிப்பாக அரிச்சந்திரன் பாடல் வரிகளை பொருள் விளக்கத்துடன் படித்தால் கண்களில் தன்னால் கண்ணீர் பெருக்கெடுத்து ஆணவம் அடங்கும், வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்படும்.

இதுபோன்ற **ஒருசில மன சஞ்சலங்களை தீர்க்க இந்தப் பதிவை சற்று மன அமைதியுடன் படித்து பாருங்கள்.... ஒரு தெளிவு உங்களுக்குள் பிறக்கலாம்!**

(இது ஆத்மார்ந்த மூத்தோரின் அறிவுரை)

உன்னை வாழ்த்த மனம் இல்லாதவர்கள் இருப்பார்கள். அவர்களைப் பற்றி கவலைப்படாதே.

நீ எதை செய்தாலும் அதில் ஒரு குறையை கண்டுபிடிக்கக்கூடிய மனிதர்களும் இருந்து கொண்டுதான் இருப்பார்கள். அதையும் பெரிது பண்ணாதே. உன் லட்சியம் எதுவோ அதை நோக்கி பயணம் போ.

ஒன்றை மட்டும் தெரிந்து கொள், ஒவ்வொரு மனிதனும் தனித்தனி ஜென்மங்கள், அவர்களுக் கென்று தனித்தனி ஆசா பாசங்கள் இருக்கும். குணங்களும் இருக்கும். அதன் வழியில் தான் அவர்களின் பயணமும் இருக்கும்.

அவர்களை ஒழுங்கு படுத்துகிறேன் என்று வேதனைகளை சுமந்து கொள்ளாதே. அவர்கள் போகும் வரை போகட்டும். போய் ஒரு அனுபவத்தை பெற்றபின் திரும்பி வருவார்கள்.

அதுவரை நீ பொறுமையாக இருக்க வேண்டும். அவர்கள் போன பாதை நல்லதா? கெட்டதா? என்பதை அவர்களாக உணர்ந்தால்தான் அவர்களுக்கு ஒரு உண்மை தெரியும்.

அந்த உண்மையை நீ முன்கூட்டியே சொன்னால் உன்னை அவர்களுக்கு பிடிக்காது. இதுதான் வாழ்க்கையின் உண்மை.

அவர்களது பூர்வ புண்ணியத்தின் அடிப்படை யில்தான் அவர்களின் குணங்களும் செயல்களும் இருக்கும்.

அது உடன் பிறந்தவர்களாக இருந்தாலும், நண்பர்களாக இருந்தாலும், கணவன், மனைவியாக இருந்தாலும், பெற்ற குழந்தைகளாக இருந்தாலும், பேரன் பேத்தி களாக இருந்தாலும், உறவுகளாக இருந்தாலும், அவர்களது பிறவி குணம் ஒரு போதும் மாறாது.

எதைச் செய்ய வந்தார்களோ அதை செய்வது தானே அவர்களின் விதி. இதை நீ மாற்றி அமைக்க முடியுமா?

ஒதுங்கி நின்று வேடிக்கை பார்! பந்த பாசத்தில் உள்ளே விழுந்து அறிவுரை சொல்லுகிறேன் என்று கெட்ட பெயரை சம்பாதித்துக் கொண்டிருக்காதே.

அவர்களுக்கு அனுபவம் தான் குரு.

அந்த அனுபவம் ஏற்பட்ட பிறகு தன்னை மாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்கு விதி இருந்தால் தன்னை திருத்திக் கொள்வார்கள். அதுவரை நீ பொறுமையாக இரு.

**எல்லையில்லாத அன்பை வைத்திருந்தேன் என்னை ஏமாற்றி விட்டார்கள் என்று புலம்பிக் கொண்டு இருக்காதே. கடலுக்கும் ஒரு எல்லை வைத்திருக்கிறான் இறைவன்.**

செயற்கையாக ஒரு குணத்தை உருவாக்கி உன்னிடம் அன்பை காட்டினாலும் தான் யார்?, தன் குணம் என்ன? என்பதை ஒரு நாள் வெளிப் படுத்தி விடுவார்கள்.

உன்னையும் திருத்திக் கொள்ளலாம்.

இன்பமானாலும், துன்பமானாலும், அதை நீயே சந்திக்க கற்றுக்கொள். அதை பகிர்ந்து கொள்வதற்கு ஒரு துணையைத் தேடாதே.

உன் இன்ப துன்பத்தில் பங்கு பெறுவதற்கு இந்த பிரபஞ்சத்தில் ஒருவர் பிறந்திருந்தால் நிச்சயம் அவர் உன்னை கைவிடாமல் உன்னோடு சேர்ந்தே பயணிப்பார். அது உன் பிறவி பிராப்தத்தை பொறுத்து இருக்கிறது அப்படி அது நடந்து விட்டால், எந்த சூழ்நிலையிலும் உன்னோடு இணைந்தே இருப்பார்.

❖ பெண்ணாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், வரும் துன்பத்தை எதிர்கொள்ளக் கூடிய ஆற்றலை உருவாக்கிக் கொள்.



எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தோடு இருந்து கொள்ள பழகிக் கொள். நாம்வந்து போகும் உலகத்தில் பிறந்திருக்கிறோம்.

அவரவர்களுக்கு என்ன வேஷம் கொடுக்கப் பட்டிருக்கிறதோ அதைத் தவிர வேறு எதையும் செய்து காட்ட முடியாது.

அதையும் மீறி சிலவேளைகளில் இறைவன் வகுத்த எல்லையை கடல் தாண்டி விடுகிறது. இயற்கையின் சுபாவங்கள் சில நேரங்களில் தங்களை வெளிப்படுத்தி விடும்.

நீ உன்னை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறாயோ அப்படி வைத்துக் கொண்டு வாழப் பழகிக் கொள். அதில் நன்மை வந்தாலும், தீமை வந்தாலும், உனக்கும் ஒரு அனுபவம் கிடைக்கும். அதை வைத்து

❖ மனிதன் மீது வைக்கும் நம்பிக்கையை விட இறைவன் மீது வைக்கும் நம்பிக்கையை அதிகரித்துக் கொள்.

❖ உன் கண்ணீரும் உன் கவலையும் உன்னை பலவீனமாக காட்டிவிடும்.

❖ அழுவதாலும் சோர்ந்து போவதாலும் ஒன்றும் நடக்கப்போவதில்லை. எப்படி இருந்தாலும் நீதான் அந்த சுமையை சுமந்து ஆகவேண்டும்.

❖ அழுது சுமப்பதை காட்டிலும். ஏற்று சுமப்பது உனக்கு சிரமம் இல்லாமல் இருக்கும்.

❖ தைரியமும் தன்னம்பிக்கையும் தான் ஒரு மனிதனை உலகத்தில் வாழ வைக்கும் என்ற உண்மையை உணர்ந்துகொள்.

❖ இந்த பக்குவத்தை அடைந்துவிட்டால் எத்துன்பமும் உன்னை நெருங்காது என்பதை உணர்ந்துகொள்.

# ஸ்வாமி வரதானந்த பாரதியின்

# சிந்தனை சுடர்!

ஸ்வாமி வரதானந்த பாரதி அவர்களின் பூர்வாச்ரம பெயர் திரு. அனந்த் தாமோதர் ஆடவலே என்பதாகும். ராஷ்ட்ரம், தர்மம், ஆன்மீகம், புத்திவாதிகள் ஆகிய விஷயங்களைப் பற்றி அவர் விரிவான கட்டுரைகள் எழுதியுள்ளார். அதில் சில சிந்தனைத் துளிகளை இங்கு பார்ப்போம்.



**தர்மம் மற்றும் கலாச்சாரம் ஒன்றே!**

'கலாச்சாரம் என்ற வார்த்தையை நாம் புதிதாக உண்டாக்கி உள்ளோம். 'சிவிலைசேஷன்' மற்றும் முக்கியமாக 'கல்சர்' ஆகியவற்றிற்கு இந்த வார்த்தையை நாம் உபயோகிக்கிறோம். நம்முடைய பண்டைய சப்தகோசத்தில் 'கலாச்சாரம்' என்ற வார்த்தையே இல்லை.

மேற்கத்திய தொடர்பு ஏற்படுவதற்கு முன்பு 'தர்மம்' என்ற வார்த் தையே நம்முடைய எல்லா காரியங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது. நம்முடைய தர்ம சிந்தனையில் தத்துவஞானம், சிந்தனைகள், நீதி மற்றும் ஆசாரங்கள் ஆகிய எல்லாம் உள்ளடங்கி உள்ளன; அதனால் உண்மையில் கலாச்சாரமும் தர்மமும் ஒன்றே.

**இன்றைய விஞ்ஞானம் என்பது தாமசீக தவமாகும்!**

நாசவேலை புரியும் விஞ்ஞானம் ராக்ஷச தவமாகும். கோர தவமியற்றி அதன் மூலம் கிடைக்கும் பலத்தால் ராக்ஷசர்கள் உன்மத்தம் மிகுந்து உலகத்திற்கு தீங்கு விளைவிக்க ஆரம்பித்தனர். அதேபோல் இன்றைய விஞ்ஞானமும் ராக்ஷசர்களின் கைகளில் சென்று விட்டதால் உலகம் அழிவை நோக்கி பயணிக்கிறது. உலகின் நன்மைக்காக விஞ்ஞானம் செயல்பட்டால் அது ஸாத்வீக தவமாகும். உலக சுகத்திற்காக, கேளிக்கைக்காக செயல்பட்டால் அது ராஜஸீக தவமாகும், மாறாக நாசவேலைக்காக செயல்பட்டால் அது தாமசீக தவமாகும்.

**பன்முகத்தன்மை என்பது இயற்கையானது!**

உலக படைப்புகள் அனைத்தும் இறைவனின் லீலை (விளையாட்டு) ஆகும். விளையாட்டில் பன்முகத்தன்மை இல்லாவிட்டால் விளையாட முடியாது. நாம் உருவாக்கியுள்ள சில விளையாட்டுக்களைப் பாருங்கள், அவற்றில் எல்லாம் சமமாக உள்ளதா? சீட்டு விளையாட்டில் எல்லா சீட்டுக்களும் ஒன்று போலவா உள்ளன? சிலவற்றில் ஏஸ் சீட்டுக்கு அதிக மதிப்பு, சிலவற்றில் ராஜா சீட்டுக்கு, சிலவற்றில் அடிமை சீட்டுக்கு அதிக மதிப்பு உள்ளது. சீட்டுக்களின் வடிவமைப்பு, நிறம் ஆகிய எல்லாம் வேறுபட்டவை. அதனால்தான் விளையாட முடிகிறது.

எல்லா சீட்டுக்களும் ஒன்று போல் இருந்தால் எப்படி விளையாடுவது? புத்தி பலத்தை உபயோகித்து சதுரங்க விளையாட்டு விளையாட வேண்டும்! அதில் ராஜா, சேனாதிபதி, ஒட்டகம், குதிரை ஆகிய எல்லாம் உள்ளன. ஒவ்வொரு காயை நகர்த்துவதும் வேறு விதமாக உள்ளன. சில இரண்டரை கட்டங்களை கடக்கின்றன என்றால் சில எதிர்கோண திசையில் நகருகின்றன. இவை எல்லாம் சமமாகவா உள்ளன? எல்லோருக்கும் ஒரே மாதிரி சீட்டுக்களா அமைகின்றன? விளையாட்டில் எல்லோராலும் ஜெயிக்க முடியுமா என்ன? யார் திறமையாக விளையாடுகிறாரோ அவரின் சீட்டு பயனற்றதாக இருந்தாலும் அவரால் ஜெயிக்க முடிகிறது. அதைப் போலவே இறைவனின் படைப்புகளும் உள்ளன. இது இறைவனின் விளையாட்டு பூமி, அவனின் லீலை. இங்கும் சிலர் ராஜா, சிலர் சேனாதிபதி, சிலர் ராணி, சிலர் அடிமை என்ற வேறுபாடு உள்ளன. மனித வாழ்க்கையில் நமக்கு நல்ல சீட்டுக்கள் கிடைக்காவிட்டாலும் திறமையாக விளையாடினால் நம்மால் ஜெயிக்க முடியும்.

அதனால் சமத்துவம், சமானம் என்பது பொய் ஆகிறது. படைப்பில் வேறுபாடுகள் உள்ளன. அதைப் புரிந்து கொண்டு எவ்வாறு நடப்பது என்பதை நாம்தான் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

**தலையில் மற்றும் இதயத்தில் இறைவன்!**

தலை மற்றும் இதயம் ஆகிய இரு இடங்களில் இறைவனின் ஸ்தானம் உள்ளது. தலையில் யோகமார்க்கம் அல்லது ஞானமார்க்கம் மூலமாக இறைவனை அடைய முடியும். இதயத்தில் கர்மயோகம் மற்றும் பக்தியோகத்தால் இறைவனை அடைய முடியும்.

ஆனால் யோக மற்றும் ஞான மார்க்கம் வெகு கடினம். அத்துடன் ஒப்பிடும்போது பக்தி மார்க்கம் சுலபம். ஆனால் பக்தியும் ஒரு விதத்தில் அவ்வளவு சுலபம் இல்லை. துக்காராம் மகாராஜ் பக்தியை 'விறகடுப்பில் செய்யப்பட்ட போளி' என்பார். அதாவது விறகடுப்பில் போளி செய்வதற்கு அதிக நேரம் பிடிக்கும். பக்திக்கு தீவிர ஆன்மீக உணர்வு தேவை. தீவிர ஆன்மீக உணர்வு என்பது இறைவனின் தொலைபேசி எண்ணாகும்; 'வேவ்லென்த்' ஆகும். அதில் இணைந்தால் ஆத்மா சாக்ஷாத்காரம் கிட்டி விடும்!

தகவல் : 'ஹிந்து தர்மத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்!' என்ற நூல்
www.spiritualresearchfoundation.org
தொடர்பு: 09380949626

# அலைமகளுடன் ஆந்தை



தென் நாட்டில் ஆந்தையைக் கண்டால் அலறி ஓடுகிறோம். ஆனால் வடநாட்டவர் தீபாவளி அன்று மகாலட்சுமியின் வாகனமாக ஆந்தையை அருகில் வைத்து வழிபடுகின்றனர்.

அன்று யார் வீட்டிலாவது ஆந்தை வந்து அமர்ந்து குரல் எழுப்பினால் லட்சுமி குபேரன் அருள் வரப்போகிறது என்று மகிழ்ச்சி அடைவார்கள்.

ஆந்தை கண்ணில் பட்டால் யோகம் அடிப்பதாக நம்பிக்கை நிலவுகிறது.

தீபாவளியன்று லட்சுமிதேவிக்கு அதிகமான முக்கியத்துவம் தருவதால் நகை பணம் போன்றவற்றையும் பூஜையில் வைத்து வணங்குகின்றனர்.

ஒருசில தொழில் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகளைக் கூட தீபாவளியன்று லட்சுமி பூஜை முடித்தவுடன் ஒப்பந்தம் செய்கின்றனர்.

# வீட்டிலேயே செய்ய கூடிய எளிய மருத்துவம்



- மாதுளம் பூவை உலர்த்தி பட்டை காய்ச்சி வாய் கொப்பளிக்க தொண்டை ரணம் நீங்கும்.
- முட்டையின் வெண் கருவை பஞ்சில் தேய்த்து முகம், கழுத்தில் தடவி அரை மணி நேரம் கழித்து ஈரப்பஞ்சினால் மெதுவாக துடைக்க முகச்சுருக்கம் நீங்கும்.
- நெய்யில் வெள்ளை வெங்காயத்தை வதக்கி சாப்பிட்டு வர நரம்புத்தளர்ச்சி குணமாகும்.
- முருங்கைப்பூக்களை பசும்பாலில் போட்டு காய்ச்சி 41 நாட்கள் தொடர்ந்து குடித்து வர தேகம் கட்டமைப்பு பெறும். தாது விருத்தியாகும்.
- வெள்ளைப்பூண்டு, வெற்றிலைக்காம்பு, வசம்பு, திப்பிலி சம அளவு எடுத்து வென்னீரில் அரைத்து உள்ளுக்கு கொடுக்க குழந்தைகளின் மாந்தம் குறையும். சளி தொல்லை நீங்கும்.
- சோம்பு, கொத்தமல்லி, சுக்கு, பனைவெல்லம் சேர்த்து கசாயம் செய்து சாப்பிட்டு வர மார்பு எரிச்சல் குணமாகும்.
- ஆண்டுக்கு ஒரு முறை மருதாணி இடுவதால் மனக்கோளாறுகள் வராமல் தடுக்கலாம்.
- சூடம், சுக்கு, சாம்பிராணி, பெருங்காயம் இவைகளை சம அளவு சேர்த்து, வடித்த கஞ்சியில் கலக்கி மறுபடியும் சூடுபடுத்தி மூச்சுப்பிடிப்பு உள்ள இடத்தில் மூன்று வேளை தடவினால் மூச்சுப்பிடிப்பு குணமாகும்.
- மருதாணி மஞ்சள் சேர்த்து அரைத்து காலில் ஆணி பாய்ந்த இடத்தில் கட்டி வர காயம் குணமாகும்.
- ஓமத்துடன் பூண்டு பொடி செய்து போட்டு கசாயம் வைத்து குழந்தைகளுக்கு கொடுக்க குழந்தைகளின் வாந்தி, கொட்டாவி குறையும்.
- தூதுவளை சாறு இரண்டு சொட்டு காதில் விட்டு வர காது அடைப்பு நீங்கும்.
- மாதுளம் பூவை கசாயம் செய்து குடித்து வர வயிற்றுக்கடுப்பு குணமாகும்.
- சுரைக்காய் வாரம் 2 தடவை சாப்பிட தொப்பை குறையும்.
- தாமரை இலை, பூ உலர்த்தி தூள் செய்து காபி போல் பருகி வர இருதயம் பலம் பெறும். இரத்தம் சுத்தம் அடையும். ஞாபக சக்தி பெருகும்.
- குங்குமப்பூவுடன் சம அளவு தேன் கலந்து மூன்று நாட்கள் தினசரி 2 வேளை உட்கொள்ள குடல் புண் குணமாகும்.
- 10 கிராம் உரித்த வெள்ளைப்பூண்டை பாலில் வேக வைத்துக் கடைந்து சாப்பிட வாயு, செரியாமை, சளி தீரும். குடல் புழுக்கள் மடியும்.
- மருதாணி இலையை நல்லெண்ணெயில் போட்டு காய்ச்சி வெந்து வரும்போது இறக்கி ஆறியபின் மை போல அறைத்து வைத்துக்கொண்டு துணியில் தடவி புண் மீது வைத்துக்கட்டி வர ஆறாத புண் ஆறும்.
- கசகசா, வால்மிளகு, வாதுமைப்பருப்பு, கற்கண்டு பொடித்து தேன் விட்டு 5 கிராம் பாலுடன் காலை, மாலை சாப்பிட்டு வர இரத்த மூலம் குணமாகும்.
- பப்பாளிப்பாலை வாய் மற்றும் நாக்கில்உள்ள புண்ணிற்கு தடவி வர வாய்புண் குணமாகும்.
- காலையில் பல் துலக்கியதும் வெறும் வயிற்றில் பச்சை வெங்காயத்தை சாறு பிழிந்து ஒரு ஸ்பூன் தேன் கலந்து குடுத்து வர பக்கவாதம் குணமாகும்.
- பச்சை இஞ்சி சாறு தேன் கலந்து தொடர்ந்து 30 நாட்கள் சாப்பிட்டு வர தலை சுற்றல் குணமாகும்.
- எலுமிச்சை சாற்றால் கைகளை கழுவி காயவிட்டு பின் மருதாணி இட்டுக்கொண்டால் மருதாணி சிவப்பாக பிடிக்கும்.
- நெல்லிக்காய் அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் இளநரை கருமை நிறத்திற்கு மாறும்.
- கை கால் உணர்வு இல்லாமல் இருந்தால் 50 கிராம் வேப்ப எண்ணெயில் கட்டி கற்பூரம் ஊறவைத்து தினசரி காலையில்
- எழுந்தவுடன் உணர்வு இல்லாத இடத்தில் சூடு பறக்க தேய்த்து வர உணர்வு திரும்பும்.
- மஞ்சள் துண்டுகளை சுண்ணாம்புத் தெளிவு நீரில் ஊற வைத்து உலர்த்தி இடித்து தூள் செய்து தேக்கரண்டி தேன், வென்னீர் அல்லது பாலில் கலந்து குடிக்க வரட்டு இருமல் குணமாகும்.
- செம்பருத்தி பூவை நீரில் போட்டு அரைமணி நேரம் கழித்து அந்த நீருடன் பூவையும் சாப்பிட்டு வர உடல் நிறம் சிவப்பாகும்.
- இரண்டு இஞ்சித்துண்டுகளை இடித்து சாறு பிழிந்து வைத்து தெளிந்த நீரை கீழே ஊற்றி அடியில் உள்ள மண்டியை தேனுடன் கலந்து பருக்கள் உள்ள இடத்தில் தடவி வர பருக்கள் மூன்று நாட்களில் குணமாகும்.
- சீரகம், கருஞ்சீரகம் இரண்டையும் பொடி செய்து கருவேப்பிலை, வெங்காயம், வெள்ளைப்பூண்டு சேர்த்து தயிருடன் கலந்து குடிக்க வயிற்று உப்பசம், பேதி குணமாகும்.
- கறிவேப்பிலை அரைத்து தேங்காய் எண்ணெயில் கலந்து காய்ச்சி தலையில் தேய்த்து வர தலைமுடி கருப்பாகவும் அடர்த்தியாகவும் வளரும்.
- உளுந்தம் பருப்பை மாவாக நன்கு அரைத்து பால் சர்க்கரை தேவையான அளவு சேர்த்து கஞ்சியாக காய்ச்சி காலை வேளைகளில் பருகி வர இதயம் பலம் பெறும். உடல் உறுதியாகும்.
- வாழைப்பழத்தோல் மீது சுண்ணாம்பு தடவி இரவு முழுவதும் பனியில் வைத்து காலையில் சாப்பிட்டால் மஞ்சள் காமாலை நோய் குணமாகும்.
- சுண்டைக்காய் வத்தலை பொடி செய்து பவுடராக்கி சமையலில் சேர்த்து வர சளி, கபம் கரையும்.

– தொகுப்பு: ஸ்ரீபதி
கோடம்பாக்கம், சென்னை.



ஆன்மிகமலர் மெயில் புக்





# நிலவறையில் வாழும் பாம்பு

## பெண்வம்சத்துக்கே அனுமதி

# அப்பூப்பனின் நாகராஜன் கோவில்

கேரளாவில் சபரிமலையில் பெண்கள் நுழையக்கூடாது என்ற சாஸ்திரம் கடைபிடிக்கப் படுவதைப் போன்று, அதே கேரளாவில் உள்ள நாகராஜர் கோவிலின் நிலவரைக்குள் நுழையும் அதிகாரம் அந்த வம்சத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணிற்கு மட்டுமே உண்டு. என்ற நடைமுறை இன்றுவரை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

நினைத்த காரியங்கள் தடங்கலின்றி நடக்கவும்; சர்ப்ப தோஷத்தால் மணப்பேறு, மகப்பேறு கிட்டாதவர்களுக்குத் தடைகள் அகலவும், நாகதோஷத்தால் பாதிக்கப் பட்டவர் களுக்கென்றே தனிப்பட்ட பிராத்தனை செய்து வழிபடும் கோவில், கேரளமாநிலம் ஏர்ணாகுளம் அடுத்த ஆலப்புழையிலிருந்து ஒரு மணி நேரம் பயணத்தில், திருவனந்தபுரம் நெடுஞ்சாலையில் ஹரிபாடு என்னுமிடத்தில், 5 கி.மீ தொலைவில் மன்னார்சாலையில் அமைந்துள்ளது.

இந்தக்கோவில் மிக பழமையான பாம்பு கோவிலாக திகழ்கிறது.

கேரளாவில் பெரும்பாலான ஆலயங்களில் பரிவார தேவதைகளில் "சர்ப்ப யட்சி' என்ற பாம்பு தெய்வம் வழிபடப்படுகிறது. பாம்பு வழிபாட்டுக்குரிய தலங்கள் சர்ப்பக்காவுகள் எனப்படுகின்றன. அங்குள்ள 'மன்னார்சாலை' என்னும் தலம் பாம்பு வழிபாட்டுக்குரிய முக்கியத் தலமாகும்.கோவிலில் எங்கு பார்த்தாலும் பாம்பு மயமாக உள்ளது..

இக்கோவில் குறித்த ஒரு புராதன கதை:

இக்கோவில் குறித்த பழமையான வரலாறு ஒன்று உள்ளது. இந்த கோவிலின் அருகில் ஒரு பழைய நம்பூதிரி அந்தண குடும்பத்தை சேர்ந்த புராதன வீடு (இல்லம்) ஒன்று இருக்கிறது. இந்த வீட்டின் பெயர் "இரிங்கடப்பள்ளி வீடு" என்பதாக அழைக்கப்படுகிறது. இந்த வீட்டின் பூர்வீக குடும்பத்தினர்கள் "மூலக் குடும்பம்" என்று அழைக்கபடுகிறார்கள் என்றும், முனிவர் பரசுராமரால், இந்த கோவிலில் பூஜை மற்றும் நிர்வாகம் செய்வதற்காக நியமிக்கப்பட்டது என்றும் நம்பப்படுகிறது.

"இந்த மூலக்குடும்பத்தின் ஒரு பெண் திருமணமாகி பல ஆண்டுகள் குழந்தை பாக்கியம் இல்லாமல் மிக்க வேதனையுடன் பரசு ராமரை வணங்கி தனக்கு குழந்தை பாக்கியம் அளிக்குமாறு வேண்டினாள்.

பரசுராமர் அந்த பெண்மணியின் வேண்டு கோளுக்கு செவி சாய்த்து "பெண்ணே நீ சிவபெருமானின் கழுத்தை அலங்கரிக்கும் பாம்புகளின் தலைவரான "வாசுகியை" வணங்கி தவமிருந்தால் உனக்கு குழந்தை பிறக்கும்" என்று அருள் வாக்கு கூறினார்.

அந்த பெண்மணியும் வாசுகியை பூஜை செய்து தவமிருந்தார். தவத்தின் முடிவில் வாசுகி அவள் முன்பில் தோன்றி "

பெண்ணே உனக்கு பாம்பு அம்சம் உள்ள ஒரு மகன் உன்னுடைய மூத்த பிள்ளையாக பிறப்பான் அவனுக்கு மரணமே கிடையாது அவன் என்றும் சிரஞ்சீவியாக இந்த உலகம் இருக்கும் வரை இருந்து உன்னையும், உன்னுடைய வம்சா வழியினரையும் பக்தர்களையும் பாதுகாப்பான் என்றும் அதன் பிறகு இளைய பிள்ளையாக ஒரு மகன் பிறப்பான் என்றும் ஆசீர்வதித்தார். அதன் படி முதல் குழந்தையாக நாகராஜன் பிறந்தார்

அதன் பிறகு, ஒரு மகனும் பிறந்தனர். இரு மகன்களும் ஒருமிக்க வளர்ந்து வந்தனர். அந்த பெண்மணியோ தன்னுடைய மகனுக்கு திருமணம் செய்ய ஆசைப்பட்டாள். தன்னுடைய ஆசையை மூத்த மகனான நாகராஜனிடம் கூறினாள்.

நாகராஜனோ தனக்கு இந்த மனித வாழ்க்கை யில் ஈடுபாடில்லை என்றும், மனித வாழ்க்கைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டு விலகி தனியாக இருக்க ஆசைப்படுகிறேன் என்று கூறவும் அந்த பெண் நாகராஜன் எங்கும் போகவேண்டாம், இந்த வீட்டின் நிலவறையில்

## குழந்தை பாக்கியத்திற்கு உறுளி பிராத்தனை

குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் இந்த கோவிலுக்கு வந்து, "உறுளி பிராத்தனை" என்ற வழிபாட்டு பிராத்தனை செய்வது இன்றும் நடந்துவருகிறது. நூற்றுகணக்கான பக்தர்க்ள் தங்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லாத குறையை சொல்லி "வலிய அம்மா" வை வேண்டி, தங்களுடைய உறுளி ப்ரார்த்தனையை நிறைவேற்றுகிறார்கள்.

உறுளி என்பது ஒரு நல்ல கனமுள்ள வட்ட வடிவமுள்ள வெங்கலப் பாத்திரம். குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதிகள் இந்த உருளி பாத்திரத்துடன் "வலிய அம்மா" விடம் தங்களுடய வேண்டுதலை சொல்லவேண்டும். வலிய அம்மா அந்த உறுளி பாத்திரத்தை புஜை செய்து அதற்கென்று நிர்ணையிக்கபட்ட ஒரு அறையில் உறுளியை கவிழ்த்தி வைத்துவிடுவார்.

அந்த தம்பதியர், தங்களுக்கு குழந்தை பிறந்த பிற்பாடு, குழந்தையுடன் கோவிலுக்கு வந்து "வலிய அம்மா" வை பார்த்து, வெள்ளியில் ஒரு பாம்பு உருவத்தை செய்து காணிக்கையாக கொடுத்த பிற்பாடு, வலிய அம்மா அந்த வெள்ளி பாம்பு உருவத்திற்கு புஜை செய்து, அந்த கவிழ்த்தி வைத்திருந்த உறுளியை நிமிர்த்தி வைத்து பிராத்தனையை முடித்து தம்பதியையும் குழந்தையையும் ஆசீர்வதிப்பார். இப்போது உள்ள கணக்குப்படி, வருடத்திற்கு 5000 உறுளி பிராத்தனைகள் நடை பெற்று வருகிறது.

கோவிலில் உருளி பாத்திரம் (220 ரூபாய்).. கிடைகிறது. கோவிலுக்கு அருகே தேவஸ் தானத்தில் தங்கும் வசதி உள்ளது.





இருந்துகொள் என்றும் நான் இருக்கும் வரை என் கண் முன்னால் இருக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டாள்.

நாகராஜன் தன்னுடய தம்பியிடம் "இந்த நிலவறையின் அருகில் ஒரு கோவில் கட்டி, அதில் நாகராஜாவின் உருவசிலையை நிறுவி, அதற்கு வேண்டிய பூஜை முறைகளையும் சொல்லிவிட்டு, கோவிலின் புனிதத்தன்மையை காக்குமாறு கூறிவிட்டு நிலவறையில் போய் யோக நித்திரையில் ஈடுபடத்துவங்கினார்.

அதற்கு முன்பு தன் தாயை நமஸ்கரித்து "அம்மா நான் இந்த குடும்பத்தையும் அதன் தலைமுறையையும், என்னுடைய பக்தர்களையும், இந்த உலகம் இருக்கும் வரை காப்பாற்றிக் கொண் டிருப்பேன். உனக்கு என்னை பார்க்கவேண்டும் என்று தோன்றினால், நிலவறைக்கு வந்து பார்க்கலாம்" என்ரு கூறிவிட்டு நிலவறைக்கு சென்று, கதவை மூடிக்கொண்டார். இன்றும் இந்த கோவிலை அடுத்திருக்கும் நில வறையில் நாகராஜன் பாம்பு வடிவில்இருப்பதாக பக்தர்கள் நம்பு கிறார்கள்.

பல நூற்றாண்டுகளாக நம்பூதிரி குடும்பத்தை சேர்ந்த ஒரு நபரைத் தவிர யாருமே அந்த நிலவறைக்குள் சென்றதாக சரித்திரமில்லை. அந்த குடும்பத்தின் மூத்த பெண்மணி



என்று சொல்லப்படும் "வலிய அம்மா" விற்கு மட்டுமே நிலவறைக்கு செல்லும் அனுமதியுண்டு. நாகராஜருக்கு பூஜை செய்யும் உரிமையும் அந்த "வலிய அம்மா"விற்கு மாத் திரமே உண்டு.



கீதா–ராஜன்

கோவில் கடவுளானநாகராஜ னுக்கு அடுத்தபடியாக முக்கியத் துவம் வாய்ந்தவர் இந்த "வலிய அம்மா". இன்றைக்கும் இது நடை முறையிலுள்ளது. "வலிய அம்மா" வின் மரணத்திற்கு பிறகு, அந்த குடும்பத்தின், மூத்த பெண்மணி, அந்த பொறுப்பை ஏற்றுகொள்கிறார்.

அப்படி அந்தப் பெண் திருமண வாழ்க்கையிலிருந்தால், அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, குடும்ப வாழ்க்கையிலிருந்து விலகி, தன்னுடய பொறுப்பை ஏற்றுக்கொண்டு "வலிய அம்மா" ஆகி பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்.

சென்ற1920ம் ஆண்டு முதல் 1993ம் ஆண்டு வரை "வலிய அம்மா" வாக இருந்த மூத்த தாயின் பெயர் "சாவித்திரி அந்தர்ஜனம்". தன்னுடய 14ம் வயதில் இந்த வலிய அம்மா பொறுப்பை ஏற்றுக்கொண்டார். திருமண வாழ்க்கையே வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு, தன்னுடய வாழ் நாள் முழுவதையும் நாகராஜாவிற்கே அற் பணித்தார்.

இப்போது இந்த வலிய அம்மா பொறுப்பில் இருக்கும் பெண்மணியின் பெயர் "உமாதேவி அந்தர்ஜனம்". 1993ம் ஆண்டு இந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டு, இன்றும் பணியாற்றி வரு கிறார். கோவில் பூஜை செய்வதோடல்லாமல், விசேஷ ப்ரார்த்தனைகளையும், பக்தர்க்ளின் வழிபாடுகளையும் கோவிலின் நிர்வாகத்தையும் மேற்பார்வை செய்து வருகிறார்.

வருடம் ஒரு முறை, சிவராத்திரிக்கு அடுத்த நாள், "வலிய அம்மா" நிலவறைக்கு சென்று நாகராஜனை வழிபடுவதாக கூறுகிறார்கள். இன்றும் அந்த நிலவறையில் நாகராஜன் இருந்துகொண்டு பக்தர்களுக்கு அருள் பாலிப்ப தாக நம்புகிறார்கள்.

– தொகுப்பு கீதா ராஜன்

தொடர்பு எண்: 8825844033

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
புக் ஓர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# நான் இறைவனைக் கண்டுள்ளேனா?

இந்தத் தொகுப்பு பரமஹம்ஸ யோகானந்தரால் 1938 மே மாதம் எழுதப்பட்டது. மனித வர்க்கத்திற்கான அவருடைய உலகளவில் செய்தியின் அதிமுக்கியமான அம்சங்களில் ஒன்றினை இது வெளிப்படுத்துவதால், இதை அவருடைய உரைகளில் தொகுப்பில் சேர்த்துள்ளார்கள்.

குருதேவர் கூறுகிறார்: “நீங்கள் எதைப் படிக்கிறீர்களோ, அது உங்களுக்கு முக்தியை அளிக்காது. ஆனால், நீங்கள் படிப்பதை வைத்து என்ன செய்கின்றீர்களோ, அதுவே முக்தியை அளிக்கிறது. வீடுபேறு, பயிற்சியினால் வரப்பெறும், சித்தாந்தத்தினால் அல்ல. ஞானத்தினால் வரப்பெறும் கண்மூடித்தனமான நம்பிகையினால் அல்ல, “என்பதை குருதேவர் உணர்த்துகிறார்.

குருதேவர் அருளுகிறார்: “உங்களுக்கான எனது இதயத்தின் செய்தி இதுதான். அதை நன்றாகக் குறித்துக் கொள்ளுங்கள். அதை வாசித்து அகமுகமாகக் கிரகித்து என் மூலமாக இறைவன் வெளிப்படுத்தியுள்ள உண்மைகளைப் பயிற்சி செய்யுங்கள்”.

“முதலில் உங்ககளையே கேளுங்கள், “நான் இறைவனைக் கண்டிருக்கிறேனா?” உங்களுடைய பதில் உங்களுக்குத் திருப்தி அளிக்காவிட்டால், அவனைதக் கண்டுள்ள, ஆத்ம ஞானம் பெற்ற மகான்களால் கற்பிக்கப்பட்டபடி தியானம் செய்வதில் மனப்பூர்வமாக ஈடுபடுங்கள்.”

மேலும் அவர் கூறுகிறார்: “ இந்தியாவில் மகான்கள் வீடுபேறு, இறைவனுடன் ஒன்றுதல் ஆகியவற்றிற்கான உலகளாவிய விஞ்ஞான யோக முறைகளை பரிபூர்ணமாக்குவதற்காக, காலங்காலமாக பரிசோதித்து வந்துள்ளனர். உங்களுடைய சொந்தத் திருப்திக்காக உங்களுடைய ஆன்மீகத் தேடலில் அந்தச் செயல்முறைகளைக் கையாளுங்கள் ஏனெனில் ஒருமுகப்படுதல் மற்றும் தியானத்தின் விதிமுறையை பின்பற்றாமல் நீங்கள் பரம்பொருளைக் காணமுடியாது; அவை மட்டுமே அவனிடம் அழைத்துச் செல்லக்கூடியவை. லோகாயத் விஞ் ஞானிகள், கண்டு பிடிப்புகளுக்கு வழிகாட்டும் பௌதிக விதிகளைக் கையாளுவதன்மூலம் இயற்கையிலிருந்து ரகசியங்களை ...ம் சேகரிக்கின்றனர். ... இதே போன்று ...ால, கொள்கை ரீதியான ...தேக்கமுற்று கடவுளுக்கான ...றக்கும் சக்தியில்லாமல் ...றது.”

“க...கருறைவான பிரார்த்தனைகளும் ...றுதி மொழிகளும், பரிசோதிக்கப்படாத கட்டளைகளும் நம்பிக்கைகளும் கடவுனை உங்களுக்குத் தரமாட்டா. ஆத்ம ஞானத்தின் படிப்படியான யோக உத்திகள், ஒரு குருவின் உதவி (மத சாத்திரம் எனும் வனாந்தரத்திற்கு அப்பால் பயணம் செய்து இறைவனை அறிந்தவர்) மற்றும் யோகத் தியானத்தில் தினசரி ஆழ்ந்து முயற்சி ஆகியவை தெய்வீக இலக்கிற்கு உங்களை அழைத்துச் செல்லும். பகவத் கீதையில் பகவான் தானே அளித்துள்ள சாட்சியம். “உனது இந்த ஊனக்கண்ணால் என்னை நீ காண இயலாது. உனக்கு ஞானக்கண் கொடுக்கிறேன். எனது ஈஸ்வர யோகத்தைப்பார் “(பகவத் கீதை 11.8)

“இறைவனை அடைவதற்கு அவனுடன் தனிமையில் இருப்பதற்காக தினமும் சிறிது நேரத்தை நீங்கள் ஒதுக்க வேண்டும். மிக அதிகமான கவனச் சிதறல்கள், அதிக அளவில் நேரத்தை வீண்டித்தல் ஆகியவற்றிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ள ... ...துடன் இறைவனைக் கண்டு, ஆன்மீக விழிப்புற்ற குருவைப் பின்பற்ற வேண்டும். இறைவனை அறிந்த உண்மையான குருமார்களை அடையாளம் கண்டுகொள்வதற்கு உங்களுடைய பொது அறிவையும், உள்ளுணர்வையும் பயன்படுத்துங்கள். இறைவனை அனுபவித்துள்ளவர்களால் மட்டுமே உங்களை அவனிடம் அழைத்துச் செல்ல முடியும்”.

“உங்களால் முடிந்தவரை இரவு நேரங்களையும் அதிகாலையையும் கவனத்தைக் கோரி நிற்கும் கடமைகளுக்கிடையே உள்ள எல்லா ஓய்வு நேரத்தையும், இறைவனிடம் உங்களுடைய முழு ஆன்மாவுடன், “உன்னை வெளிப்படுத்துவாயாக!” எனப் பிரார்த்திப்பதற்குப் பயன்படுத்துங்கள். இறை அனுபூதிக்கான விலை தனித்திருத்தலாகும். விழித்தெழுங்கள்! குருட்டு நம்பிக்கையில் நேரத்தை இனிமேலும் வீணாக்காதீர்கள்: ஆத்ம ஞானத்தை அடைவதற்கான பரிசோதிக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி இறைவனை அறியுங்கள்.”

இறைவனை அடைவதற்கான மிக முக்கியமான வழியை குருதேவர் கூறியுள்ளார். இறைவனை அடையவேண்டும் என்ற குறிக்கோளுடைய பக்தர்கள் குருதேவரின் மேற்கண்ட போதனைகளை நன்கு படித்து, அறிந்து, உணர்ந்து பின்னர் செயல்படவேண்டும். இறைவனை அறிய வேண்டும் அல்லது அவனை அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடைய இறைபக்தன் யாராக இருந்தாலும் குருதேவர் கூறியுள்ளவாறு தியானம் செய்ய வேண்டும். அவர் கூறுகிறார்: “என் மூலமாக இறைவன் வெளிப்படுத்தியுள்ள உண்மைகளை பயிற்சி செய்யுங்கள். இறைவனை நேசிக்க வேண்டும். தியானத்திற்குத்தான் அவர் அதிக மதிப்பு தந்திருக்கிறார். பொதுவாக மகான்கள் அனைவருமே தியானத்தால் மேல் நோக்கி வந்து இறைவனை அடைந்தவர்கள். எனவே அவர்களுடைய போதனைகளைக் கண்டிப்பாகக் கடைபிடித்தால் நிச்சயம் இறைவனைக் காணலாம். என்னிடத்தில் ஒரு சிலர் இதே கேள்வியை கேட்டுள்ளனர்.



94
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

குருதேவர் கூறியதைத்தான் நான் அதற்குப் பதிலாக அளித்துள்ளேன். ஆழ்ந்த தியானத்தால் மிகப் பெரிய பலன் பெறுவோம். அதனால் நமது பல கேள்விகளுக்கு நாம் பதில் கிடைக்கப் பெறுவோம். அதற்கு சில வரையறைகள் உண்டு. அதைக் கடைபிடித்தால் இறைவன் நிச்சயம் வருவான்

1.நாம் இந்த உலகத்தையும் உலகப்பொருட்களையும் கண்டிப்பாகக் கைவிட வேண்டும். அவற்றின்மேல் எவ்விதப் பற்றும் ஆசையும் வைக்கக்கூடாது.

2. அதற்குப்பதிலாக அந்தப் பற்றினையும் ஆசையையும் இறைவன்மேல் வைக்க வேண்டும். உண்மையான கணவன் மனைவியர் பரஸ்பரம் நேசிப்பது போன்று தாய் தந்தையர் குழந்தைகளை நேசிப்பது போன்று ஒரு கஞ்சன் பணத்தை நேசிப்பது போன்று இறைவனை நேசிக்க வேண்டும். ஆழ்ந்த அன்பு அவனிடத்தில் வர வேண்டும். இவ்வாறான மனப்பாங்குடையவர்களுக்கு இறைவன் தென்படுவான்.

உதாரணமாக இறைவன் ஒரு பக்தனிடம் “நீ, உனக்கு பிடித்த உணவை உண்ணக்கூடாது” என்று கூறினால் உடனே அதை நன்கு புரிந்து கொண்டு இறைவன் சொன்னதை தட்டாமல் ஏற்றுக்கொண்டு உடனே செயல்பட வேண்டும். இது போன்று என்னென்ன செய்யச் சொல்கிறானோ அவற்றையெல்லாம் செய்ய வேண்டும். இவ்வாறு பல முறை இறைவன் சோதிப்பான். எத்தனை முறை சோதித்தாலும் அதை மனதார ஏற்றுக்கொண்டு, அந்த அன்பன் இறைத்தந்தையிடம் ஆழ்ந்த அன்புடன் “நீ என்ன செய்யச் சொன்னாலும் நான் செய்கிறேன் தந்தையே; நான் உன் உண்மையான குழந்தை.” என்று கூறி அவன் என்ன சொன்னானோ அதைச் செய்ய வேண்டும். இவ்வாறு ஒரு பக்தன் நடந்து கொண்டானேயானால் நிச்சயம் இறைவன் அவனிடம் வருவான் என்பதில் துளியும் ஐயமில்லை.


குருப்ரியா

குருதேவர் கூறியதற்கிணங்க பகவத் கிதையில் கிரியா யோகத்தைப் பற்றி ஒரு ஸ்லோகம் உள்ளது.

அச்ரத்தானா: புருஷா
தர்மஸ்யாஸ்ய பரந்தப
அப்ராப்ய மாம் நிவர்த்தந்தே
ம்ருத்யுஸம்ஸார வர்த்மனி

பொருள் பகவான் கிருஷ்ணன் அருளுகிறார்: ஜனங்கள் மிகவும் எளிதான இந்த வித்தையை (கிரியா யோகம்) நன்கு புரிந்து கடைபிடிக்காததால்தான் இறைவனை அடையாமல் ஜனன மரண ஸ்வரூபமான சம்சாரத்தில் தத்தளிக்கின்றனர். மிகவும் மிக ரகசியமான இந்த யோகத்தை எல்லோரிடமிருந்தும் கேட்க முடியாது.மிக அரிதான குருமார்களுக்கு மட்டுமே இதைப்பற்றித் தெரிய வாய்ப்புள்ளது. அப்படிப்பட்டவர்களை அணுகி அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டும்.



கேட்ட மாத்திரத்தில் கிரியா யோகம் என்பது பெரியவிஷயம் அல்ல, இது மிகவும் சாதாரணம் என்று எண்ணக்கூடாது. மிகுந்த சிரத்தையும் பரிபூரண விஸ்வாசமும் இருக்க வேண்டும். இது போன்ற இரகசியங்களை அறியாததால்தான் பல பேர்களுக்கும் இந்த வித்தையை கற்றுக்கொள்வதற்கு முடியாமலும் அல்லது கற்றுக்கொண்டாலும் பயன்படாமல் நஷ்டமாகிப் போகிறதும். பிறப்பு இறப்புகளாகின்ற அறியாமை பெருக்கெடுத்து ஓடுவதிலிருந்து ஒருவன் தன்னை காப்பாற்றிக் கொள்வதற்கு இந்த வித்தையை அறிய வேண்டியது மிகவும் அவசியம். (பகவத் கீதை அத்.9 ஸ்லோககம் .3)

இத்ந ஸ்லோகத்தில் கூறப்பட்டுள்ளவற்றைத்தான் குருதேவரும் கூறியுள்ளார் “இறைவனை அறிந்த உண்மையான குருமார்களை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட குருவை பின்பற்ற வேண்டும்.”

பகவத் கீதையிலுள்ள மற்றும் ஒரு ஸ்லோகம் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளேன்.

க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா சச்வச்சாந்திம் நிகச்சதி
கௌந்தேய ப்ரதிஜானீஹி நமே பக்த: ப்ரணச்யதி

பகவான் அருளுகிறார்: “பகவத் தர்மங்களை (இறை தர்மங்களை) நன்கு அறிந்து தவறின்றி கடை பிடிப்பவர்கள் மிகவும் வேகமாக பரமசாந்தியை அடைவர். அறிவும் ஆசரணமும் ( கடைபிடித்தல்) கிடைக்க வில்லையெனில் பலனை அடைவதற்கு காலதாமதமாகும். சிறிதளவாவது பகவானை சேவித்த பக்தன் அழிவான் என்பது ஒருக்காலும் இல்லை. தினந்தோறும் சிறிது சிறிதாக இறைவனை சேவித்து கொண்டிருக்கின்ற பக்தன் எவ்வளவு மூடனானாலும் காலப்போக்கில் சித்த சுத்தி கைவரப்பெற்று இறைதர்மங்களை நன்கு அறிந்து கடைபிடிப்பதற்கான சக்தியும் பக்திஞான வைராக்கியங்கள் முழுமையாகவும் கிடைக்கபெறுகிறான்.

கர்மவினைகளின் அளவிற்கேற்ப காலதாமதம் உண்டாகும் என்பதுதான். உலகவியாபாரம் முழுமையாகச் செய்தால்தான் லாபம். ஆனால் பகவத் சேவை சிறிதளவு செய்தாலும் அது இறை அனுபூதிக்கு உதவுகிறது. அப்படிப்பட்ட ஒரு பக்தனுக்கு அழிவில்லை. எனவே தினமும் சிறிதளவாவது செய்ய வேண்டும்.” (பகவத் கீதை அத்.9 ஸ்லோகம் 31) தியானத்தைத்தான் சேவை என்கிறார் பகவான் கிருஷ்ணன்.

ஆத்மஞானத்தின் படிப்படியான யோக உத்திகளை, இறைவனை அறிந்த குருவின் உதவியால் பயிற்சி செய்து யோக தியானத்தில் தினசரி ஆழ்ந்து, குருவின் உதவியால பயிற்சி செய்து முயற்சி செய்தால் தெய்வீக இலக்கிற்கு உங்களை அழைத்துச் செல்லும் என்கின்ற அவருடைய போதனைகளும் பகவத் கீதையில் கூறியுள்ள பாகவத தர்மங்கள் என்பதும் ஒன்றேயாகும். எனவே ஆத்ம ஞானம் பெற்ற மகான்களால் கற்பிக்கப்பட்டபடி தியானம் செய்வதில் மனப்பூர்வமக ஈடுபடுங்கள் என்று குருதேவர் கூறுகிறார். இதற்கு மேல் எந்த குருவும் தன் சீடர்களுக்கு விளக்கமாகக் கூற மாட்டார்கள். எனவே நமக்கு தேவை சரியான பாதையை காட்டுகின்ற ஓர் உண்மையான குருதான். எனவே குருதேவர் பரமஹம்ஸ யோகானந்தர் மூலமாக இறைவன் எழுதியுள்ள இந்தத் தொகுப்பை வாசித்து பின்பற்றினால் நிச்சயமாக இறைவனை அடையலாம் என்பது உண்மை. அனைவரும் அவரை பின்பற்றுங்கள். நான் இறைவனைக் கண்டுள்ளேனா என்ற இந்தத் தொகுப்பு குருதேவர் தன் சீடர்களுக்காகவும் மற்ற மனிதர்களுக்காகவும் அவரே எழுதியது. மற்றவையெல்லம் அவருடைய சொற்பொழிவேயாகும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# பாழடைந்த சிவாலயங்கள்

## புதுப்பித்தால் கிடைக்கும் பலன்கள்

தற்போது தமிழகத்தில் அதிகப்படியான திருக் கோவில்கள் புதிதாக கட்டப்பட்டு வரும் அதே சூழலில் பல்வேறு கோவில்கள் கேட்க நாதியற்று பாழைந்து முட்புதர்களாக மாறிவருவதும் வேத னையான ஒன்றாகும்.

இதுபோன்ற கோவில்கள் பெரும்பாலானோர் செல்வதற்கே அஞ்சுகின்றனர், இது முற்றிலும் தவறான செயல்முறையாகும். ஒரு ஊரில் கோவில் பாழடைந்து சிதிலமடைந்தால் அது அந்த ஊருக்கும், அந்த ஊர் மக்களுக்கும் எண்ணி லடங்காத தோஷங்களை உண்டாக்கிவிடும்.

உண்மையில் இதுபோன்ற கோவில்கலில் தீய சக்தி ஆக்கிரமிக்கும் என்ற கருத்து முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை, இறைவழிபாடு நடைபெற்ற கோவிலில் எப்போதும் தீய சக்தி நுழை யாது. பராமரிக்க, பாதுகாக்க பொருளாதாரம் இல்லாத காரணத்தால்தான் பல கோவில்கள் சிதிலமடைகின்றன.

உண்மையில் ஒருபாழடைந்த கோவிலில் சூழலை அறிந்து கொள்ள வேண்டுமானால் அந்த இடத்தில் மௌனமாக தியானத்தில் ஈடுபட வேண்டும். அப்படி தியானத்தில் ஈடுபடும்போது மனம் லயித்து இறைவனுடன் ஒன்றினைந்தால் அந்த பாழடைந்த கோவிலில் அபரிமிதமான சக்தி உள்ளது என்று பொருள்.

மனம் லயிக்க சற்று சிரமப்படுவதை அறிந் தால் நிச்சயம் அந்த கோவிலுக்கு வழிபாடு தேவைப் படுகிறது என்று பொருள்.

புதிய கோவில்களை கட்டுவதற்கு பதில் இது போன்ற பாழடைந்த கோவில்களை புதுப்பித்தால் 3 தலைமுறையினருக்கு அதன் பலன் கிடைக்கும்.

எந்த ஊரில் குலதெய்வம் சம்பந்தப்பட்ட தெய்வங்கள் குடியிருந்த கோவில் பாழடைந்து போகிறதோ அந்த அளவிற்கு அந்த குலதெய்வத்தை வழிபடுபவர்களின் குடும்பத்தில் பிரச்சனைகள், சண்டை சச்சரவுகள் பெருகும்.

குலதெய்வம் வழிபாட்டுக்குரியதாக இருக்கும் போது அதன் சக்தி, குலதெய்வத்திற்குரிய குடும் பத்தை அரவணைத்து காத்துக் கொண்டிருக்கும், அந்த குலதெய்வத்திற்கே வழிபாடு இல்லாமல் சிதிலமடையும்போது அந்த குலத்தை காத்துக் கொண்டிருந்த சக்திக்கும் பலம் குறையத் துவங் கும்.

இதனால் பூர்வ ஜென்மக்கர்மாக்களின் பலம் கூடி அந்த குடும்பத்தை ஆட்டிப்படைக்கும். இத னால்தான் எந்த ஊரில் இருந்தாலும் வருடத்திற்கு ஒருமறை குலதெய்வ வழிபாட்டை அவசியம் செய்வேண்டும், அந்த குலதெய்வக் கோவிலை பாதுகாக்க வேண்டும் என்று நமது முன்னோர் கூறியுள்ளனர்.

புதிய ஆலயத்தை கட்டுவதாலும், பழைய ஆல யத்தை புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்வதாலும் கிடைக்கும் பலனைப் பற்றி சூத முனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்கு மிகப்பெரிய சொற்பொழிவாற்றியுள்ளார்.

அவற்றில் ஒருசிலவற்றை பார்ப்போம்.

- சிவாலயம் எழுப்புபவன் தினமும் பெருமானை வழிபாடு செய்தால் உண்டாகும் சிறப்பை அடைகிறான்.
- அவன் குலத்தில் வாழ்ந்த நூறு தலை முறையினர் சிவலோகம் செல்வர்.
- சிவாலயம் எழுப்ப வேண்டும் என்று மன தால் நினைத்தாலே ஏழு பிறவிகளில் செய்த பாலங்களில் இருந்து விடுபடுவான்.
- ஆலயம் கட்டி முடித்தால் அதில் உள்ள கற்க்கள் ஒவ்வொன்றிர்க்கும் ஒவ்வோரு ஆயிரம் ஆண்டுகள் சிவ லோகத்தில் இருக்கும் வேறு பெறுவர்.
- சிவலிங்கத்தை உருவாக்கு பவர் சிவலோகத் தில் அறுபதி னாயிரம் ஆண்டுகள் இருப்பார். அவனது தோன்றல்களும் சிவலோகத்தை அடையும் புன்னியம் பெருவர்.
- சிவாலயத் தொண்டுகளில் ஈடுபடு வோரை எமன் நெருங்கக் கூடா தென்று சிவ பெருமான் எச்சரித்து உள்ளார். அவர்கள் தலைமுறையினரைக் கூட எமதூதர்கள் நெருங்க மாட்டார்கள்.
- சிவாலயத்தில் உரிய பொருள்களால் அபி ஷேகம் செய்து வழி படுபவன் ஆயிரம் பசுக் களைத் தானம் செய்த பலனைப் பெறுவான்.
- கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் சிவ லிங்கத் துக்கு சிவ லிங்கத்துக்கு நெய் அபிஷேகம் செய்தால் சர்வ பாவங்களும் விலகும்.
- பௌர்ணமி, அம்மாவாசைகளிலும் சிவ லிங்கத்திற்க்கு அபிஷேக, ஆராதனைகள் செய்வோர்க்கும் அத்தகைய பலனே கிடைக் கும்.
- பிரதோஷ காலங்களில் நெய்யபிஷேகம் செய்தால் அது தெரிந்தோ,தெரியாமலோ செய்த பாவங்களை நீர்மூலமாக்கும்.
- பசும்பாலால் அபிஷேகம் செய்தால் சிவலோக மடைந்து என்றும் மகிழ்சியாக இருப்பார்.
- நவக்கிரகங்களும் அவனுக்கு அருள் புரியும்.
- மலர்களுக்குப் பதில் பிருங்கராச பத்திரம், அருகம்புல் போன்றவற்றால் அர்ச்சனை செய்யலாம்.






ஆன்மிகமலர் மெயில் புக்

# வாஸ்து முறையில் அமைந்துள்ள அருணாசலேஸ்வரர் ஆலயம்

கி.மு 3000 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டிருக்கக்கூடுமெனக் கருதப்படுகிறது. இந்துக்களின் முதல் நூல்களான நான்கு வேதங்களில், நான்காவது வேதமான அதர்வண வேதத்தில் இது பற்றிச் சொல்லப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. வாஸ்து சாஸ்திரத்தின் பல்வேறு அம்சங்களையும் விரிவாக விளக்கிப் பல நூல்கள் பழைய காலத்திலேயே எழுதப்பட்டுள்ளன.

வாஸ்து சாஸ்திரத்தின் நோக்கம், மக்களுடைய நல்வாழ்வுக்காக அவர்களுடைய தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்வதுடன், கட்டப்படுகின்ற கட்டிடம், மனிதன் இயற்கையுடனும், இப் பிரபஞ்சத்தின் ஒழுங்குடனும் இசைந்து போவதற்கு உதவுவதுமாகும். வாஸ்து சாஸ்திரம், ஒரு கட்டிடத்தை வெறும் கல்லாலும், மரத்தாலும், உருக்காலும், கான்கிரீட் (Concrete) கட்டப்பட்ட உயிரற்ற அமைப்பாகக் கருதுவதில்லை.

வாஸ்து பூமிபூஜையின் அடிப்படை தத்துவம் ஒரு கட்டிடமொன்று கட்டப்படும் முன்பு மண்ணின் தன்மையை ஆராய்ந்து அறிந்து கொள்வதே.


அதர்வ வேதம் தவிர வராஹமிஹிரரால் ஆக்கப்பட்ட பிருஹத் சம்ஹிதை என்னும் சமஸ்கிருத சோதிட நூலிலும் வாஸ்து சாஸ்திரம் பற்றிக் குறிப்பிடத்தக்க அளவு தவல்கள் உள்ளன. மயனால் எழுதப்பட்ட மயமதம், மானசாரரால் ஆக்கப்பட்ட மானசாரம், விஸ்வகர்மாவின் விஸ்வகர்மீயம் முதலிய பல நூல்கள் தனிப்பட வாஸ்து சாஸ்திரம் பற்றி எழுந்த நூல்களாகும். 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஸ்ரீ லலிதா நவரத்னம் என்னும் பெயரில் வெளிவந்த நூலொன்று பண்டைக் காலத்தில் ஏற்பட்ட சிற்ப நூல்களாக 32 நூல்களைப் பட்டியலிட்டிருக்கிறது.

இதில்,

1.விசுவதர்மம், 2.விசுவேசம், 3.விசுவசாரம், 4.விருத்தம்,5.மிகுதாவட்டம், 6.நளம், 7.மனுமான், 8.பானு, 9.கற்பாரியம், 10.சிருஷ்டம், 11.மானசாரம், 12.வித்தியாபதி, 13.பாராசரியம், 14.ஆரிடகம், 15.சயித்தியகம், 16.மானபோதம், 17.மயிந்திரமால், 18.வஜ்ரம், 19.ஸௌம்யம், 20.விசுவகாசிபம், 21.கலந்திரம், 22.விசாலம், 23.சித்திரம், 24.காபிலம், 25.காலயூபம், 26.நாமசம், 27.சாத்விகம், 28.விசுவபோதம், 29.ஆதிசாரம், 30.மயமான போதம், 31.மயன்மதம், 32.மயநீதி என்பனவாகும்.


சிவமுருகன்

இவற்றுள் பல இன்று இல்லை. இப் பட்டியலில் காணப்படும் இன்றும் புழக்கத்திலுள்ள நூல்களான மானசாரம், மயன்மதம் (மயமதம்) என்பவை சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டாலும், தென்னிந்திய நுல்களாகும்.




அக்காலத்தில் பெரும்பாலும் வாஸ்த்துமுறை கடைபிடிக்கப்பட்டதற்கு சான்றாக திருவண்ணா மலை கோவில் விளங்குகிறது. வாஸ்து முறைப் படி அமைந்துள்ளதே திருவண்ணாமலை.


கிழக்கு ...................... இந்திர லிங்கம்
தென்கிழக்கு ............ அக்னிலிங்கம்
தெற்கு...................... எமலிங்கம்
தென்மேற்கு ............. நிருதி லிங்கம்
மேற்கு ..................... வருண லிங்கம்
வடமேற்கு................ வாயு லிங்கம்
வடக்கு ..................... குபேர லிங்கம்

வடகிழக்கு ஈசானிய லிங்கம் என வாஸ்துவில் அஷ்டதிக்கும் அமைந்துள்ளதால், வாஸ்து குறைபாடு உள்ள வீட்டில் வசிப்பவர்கள் இந்த அஷ்டதிக்கு லிங்கத்தின் முன் விளக்கேற்றி வழிபட்டு வந்தால், வீட்டில் உள்ள வாஸ்து குறைபாடுகள் நீங்கும். கார்த்திகை தீபத்தன்று, எட்டு தீபத்தை எட்டு திசை அதிபதி முன் ஏற்றி வழிபட்டால், எல்லா வாஸ்து பிரச்சனையும் தீர்ந்து விரைவில் நல்ல வீடு கட்ட முடியும். நலமாய் வளமாய் வாழ முடியும்.

எளிதாக வீடுகட்ட எளிய வழிமுறைகள்

1. ஒருவர் வீடு கட்ட வேண்டும் எனில் 48 நாள் நல்லெண்ணையில் விளக்கு போட வேண்டும்.
2. ஸ்ரீ லஷ்மி குபேர எந்திரம் 2.5"×2.5" மற்றும் இதே அளவுள்ள ஸ்ரீ வாஸ்து எந்திரம். விளக்குக்கு முன் வானத்தை பார்த்தார்போல் வைத்து 48 நாள் விளக்கு ஏற்ற வேண்டும்.
3. நிச்சயமாக வீடு கட்ட முடியும். பாதியில் நின்ற வீட்டிற்கும் மேற்சொன்ன இதே முறையை பின்பற்ற வேண்டும்.
4. பிற மதங்களைச் சார்ந்தவர்கள் அவரவர் மத வழக்கங்கள் படி மெழுகுவர்த்திகளை 48 நாட்கள் நம்பிக்கையுடன் ஏற்றி ஜெபித்து வழிபட்டால் வீடு கட்ட முடியும்.
5. கிழக்கு அல்லது வடக்கு ஈசானியத்தில் உயரமான திண்ணைகள் இருக்கக்கூடாது. இருந்தாள் நம்மால் எதுவும் செய்ய முடியாது.
6. சுமைகள் தொடர்ந்து இருக்கும் முக்கியமாக ஆண் வாரிசுகளை பாதிக்கும்.
7. ஈசான்ய பகுதி வெளிச்சம் மற்றும் காற்று எளிதாக நுழையும் வகையில் இருந்தால் எல்லா நலமும் வளமும் கிடைக்க வழிகோலும்.

வாஸ்து நிபுணர் சிவமுருகன்
Cell:9364556412, 6379899392



ஆசிரியர், வெளியீட்டாளர்

C.N.ராஜா

செல்: 8825844033

•••

இணை ஆசிரியர்

செந்தில்நாதன்

•••

துணை ஆசிரியர்கள்

ஷியாம்சுந்தர்,

சஞ்சனா, ஸ்ரீபதி,

குருபிரியா செல்: 9894595909

புனிதவேல் செல்: 9841807572

•••

வடிவமைப்பு

பான்ராஜாகிராபிக்ஸ்

செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்

aanmeegamalar.com

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033


## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்

08825844033


ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும் ஆன்மிக மாதமிருமுறை இதழ்

# இயற்கையும் கடவுளும் வேறு வேறல்ல

ஆத்மபோதம் என்பது ஒரு கல்வி. இது நம்முடைய உள்மனதின் நினைவை நாமே படித்து தெரிந்து கொள்வது ஆகும். இதுவே இதன் விளக்கம் ஆயினும் உள்நினைவு என்ற தத்துவத்திற்கு தனியாக ஒரு அறிவு என்பதே கிடையாது. பின்பு இந்த போதம் எப்படி வருகிறது? ஒன்றிலேயே அமிழ்ந்திருக்கும் இத்தகைய கல்வி ஞானத்தை அகில உலகமும் ஒன்று என்ற நினைப்பே ஆன்மாவுக்கு அறிவைத் தருகிறது. இதையே ஆன்மாவைப் பற்றிய அறிவில் மூழ்கி இருத்தல் என்பதை ஆன்மபோதம் எனப்பட்டது.

❖❖❖

மேலே விளக்கம் இப்படி இருக்கும்பொழுது சுயநலம் என்றால் என்ன அல்லது சுயநல அறிவு என்றால் என்ன? அன்பர்களே இது ஆன்மபோத அறிவை போன்றது அல்ல. இதன் தன்மை முற்றிலும் புறம்பானது. சுயநலம் என்பது ஒரு மனிதனின் வெறுமை ஓடிய தன் னைப் பற்றிய அராஜக நினைவு. என்ன என்றால் இதுதான் உண்மை. இத்தகைய அறிவு எப்படி வருகிறது? ஒரு மனிதன் தனது உடம்பை பற்றிய நினைவாகவே உள்ள அறிவுதான் கர்வம் என்று பெயர். அந்த கர்வமே சுயநல அறிவிற்கு காரணமாகிறது. கர்வம் நீங்கினால் ஞானம் வந்துவிடும்.



❖❖❖

பல அழகான மலர்கள் பூமியின் மண்ணுக்கு நன்கு அறிமுக மாகி இருக்கின்றன. எதனால்? அதனது சொந்த மலரின் அழகினால் அல்ல; அழகுள்ள மலர்களின் விதைகளை பூமி இடம் கொடுத்து உற்பத்தி செய்கின்றது. இதுவே மலர்களின் பொலிவிற்கு காரணம். ஆயினும் பரவுகின்ற மலர்களின் நல்மணத்தாலும் உலகம் மலர்களை அறிந்திருக்கிறது. இவ்வகையில் மலர்கள் உலகைக் கவர்ந்துள்ளன.

❖❖❖

ஒவ்வொரு மலரின் அழகழகான இதழ்கள் வண்ணமாயும் அழகாயும் காட்சி அளிப்பது என்பதே பொங்கி எழும் சந்தோஷமாகும். அது நமக்கு. இங்கே மலர்களுக்கு எது பொங்கி எழும் சந்தோஷம்? தங்களை ஆட்டி அசைக்கின்ற காற்றே ஆகும். மேலும் நமது சுவாசத் தின் சந்தோஷம் மலர்களின் மணமே.

❖❖❖

உலகிலுள்ள மக்கள் மலர்களைப் போன்ற மலர்ச்சியையும் அதன் மணத்தைப் போன்ற நறுமணத்தையும் தங்களது குணங்களில் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இதிலே உடம்பை மலருக்கு சமமாகவும் அறிவைப் பரப்பும் அறிவுமணத்தை புத்தியாகவும் உதாரணப்படுத்திப் பார்க்க வேண்டும்.

❖❖❖

உலகில் மலர்களின் நன்மை என்ன? அதில் உலகில் நிச்சயமாகவும் எண்ணங்களாலும் கடவுளைப் பற்றியும் மலரைப் பற்றியும் வேறுபடுகின்ற மக்கள் இருக்கிறார்கள். அது எப்படி என்றால் மலர் மலருவது தங்களது பரம்பரையின் புதிய வளர்ச்சியான வித்துக்களைத் தோற்றுவிப்பதற்கே. கடவுளோ தோன்றிய நம்மை தோன்றாத நம்மையும் காத்த எண்ணிக் கொண்டிருப்பதற்கே. அவனன்றி ஓரணுவும் அசையாதல்லவா? பரம்பரைக்கும் மலருக்கும் வித்துக்கும் பிறகு வித்துக்கும் மலருக்கும் தொடர்பு இருப்பதைப் போன்று ஒரு அழகுமலரின் உபயோகம் எப்படி எல்லாம் இருக்கிறது பாருங்கள். மலர்ந்த மலர்கள் தேனீக்களுக்குப் பயன்பட்டு மற்றொரு மலரைக் காயாக்குவதற்கும் பயன்படுகிறது. என்னே மலர்ச்சியின் தன்மை?

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்

அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு

எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மிகமலர்.காம்

www.aanmeegamalar.com

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்





ஆன்மிகமலர் மெயில் புக்

16-30 நவம்பர் 2020 27

www.aanmeegamalar.com



# ஆவிகள் உண்டா? இல்லையா?

ஆவி, பேய், பிசாசு, பூதம் என்றவுடன் நமக்கு நினைவுக்கு வருவது என்ன? வெள்ளை ஆடை, தரையில் கால் படாமல் மிதந்து செல்லுதல், தலைவிரிக் கோலம், மல்லிகைப் பூ வாசம், சலங்கை ஒலி இந்த மாதிரியான கற்பனை நமது மனதில் ஆழமாக பதிந்து விட்டது. அதற்கு காரணம் சினிமாக்களும், நாவல்களும், நமது பாட்டிமார்களும், பேய்பிடித்து ஆடுவதாக கூச்சல் போட்டுக்கொண்டு தெருவில் ஓடும் அப்பாவி பெண்களும் இவர்கள் சித்தரித்த இந்த கோலம் சரியானதா...? ஆவிகள் இப்படி தான் இருக்குமா...? என்று ஆவிகள் உலகத்தில் நல்ல அறிமுகமும், தேர்ச்சியும் பெற்ற நமது குருஜியிடம் கேட்டோம்.

அதற்கு அவர் சிரித்தார். நமது விருப்பபடி சில கற்பனைகளை வளர்த்து கொண்டு, இது இப்படித்தான் இருக்குமென்று கருதுவது அறியாமை மட்டுமல்ல. ஆபத்தும் கூட. பாம்பு கடித்து செத்தவனை விட கடித்துவிட்டதே என்ற அச்சத்தில் செத்துப் போனவர்களின் எண்ணிக்கை தான் அதிகம். அச்சம் என்பது மிக கொடிய நோய். ஆனால், அந்த நோய் தான், சோறு உண்ண மறுக்கும் விளையாட்டு பிள்ளை காலத்திலிருந்து இன்று வரை சக மனிதர்கள் நமக்கு புகட்டி கொண்டிருக்கிறார்கள்.

சில திரைப்படங்களில், ஆவிகளின் நடமாட்டத்தை பற்றி காட்டுகிற காட்சிகள் மிரட்டுவது போல் இருந்தாலும், விஷயம் தெரிந்தவர்களுக்கு வேடிக்கையாக தான் இருக்கிறது. முதலில் ஆவியை பற்றி அடிப்படையான விஷயத்தை தெரிந்து கொள்ளுங்கள். நமது உயிருக்கு, அது தங்குவதற்கு சரீரம் என்ற ஒன்று இருப்பதனால் நாம் மனிதர்கள் என்று கருதபடுகிறோம். ஆவிகளுக்கு அந்த உடம்பு கிடையாது. அவைகளுக்கும் நமக்கும் உள்ள வேறுபாடு இது தான். வெள்ளைநிறத்தில் கருப்பான குழி விழுந்த கண்களும், கோரைப் பற்களும், கொக்கு போல நீளமான மூக்கும் நமது கற்பனையே.

ஆவிகள் வெள்ளை நிறத்தில் மட்டுமே இருப்பது இல்லை. எனக்கு தெரிந்தவரையில் கருப்பு, வெள்ளை, ஆரஞ்சு போன்ற நிறத்தில் ஆவிகள் வரும். ஆவிகள் வந்தால் குறிப்பாக பெண் ஆவிகள் வந்தால், சலங்கை சத்தம் வரும் என்பதெல்லாம் கிடையாது. வருகிற ஓசையே இல்லாமல் ஆவிகள் வருவது உண்டு.

வேறு பல ஓசைகளை எழுப்புவதும் உண்டு. நாம் வாழுகிற போது நமது உடல் குண்டாக, கொழுத்து இருந்தால் ஆவியான பின்பும் தோற்றம் அப்படியே இருக்கும் என்று கூறவும் இயலாது. ஆவி தோற்றம் என்பது வாயுத்தன்மை மிகுந்தது என்பதனால், காற்றில் அலை பாய்வது போல தெரிந்தாலும், பழைய மனித தோற்றம் ஒரு குறியீடு போல தெரியும். என்ற பதிலை சொன்னார். அவர் கூறியது வியப்பாக இருந்தது.

நமக்கும், ஆவிக்கும் வித்தியாசம் உடம்பு மட்டும் தான் என்றால் ஆவிகளால் வருங்காலத்தை எப்படி உணர்ந்து கொள்ள முடிகிறது. நம்மால் அது முடிவதில்லையே என்ற கேள்வி பிறந்தது. அதற்கும் குருஜி தக்க பதில் வைத்திருந்தார். மதில் சுவற்றின் மேல் இருப்பவன், சுவற்றிற்கு உள்ளே நடப்பதையும், வெளியே நடப்பதையும் காண முடியும். மரணம் என்பது உயிரை உடம்பிலிருந்து முற்றிலுமாக பிரித்து விடுவதனால் உயிருக்கு உடல் ரீதியான சங்கடங்கள் கிடையாது.

எனவே அவைகளால் மூன்று காலங்களையும் ஒரு சேர காண முடியும். நாம் உடம்போடு கிடந்து அவதிப்படுவதனால் காலம்என்ற தேரில் செல்லுகிற வாய்ப்பு நமக்கில்லை.

ஆவிகளால் வருங்காலத்தை பற்றி கூறமுடியுமே தவிர, அக் காலங்களில் நாம் அனுபவிக்கும், நல்லது கெட்டதுகளை மாற்றிவிட இயலாது. வருவதை முன்கூட்டியே அறிந்து கொள்வது கூட, ஒருவித தடுப்பு என்ற வகையில் ஆறுதல் அடையலாம். காலத்தை மாற்றுகிற அதிகாரம் ஆண்டவன் ஒருவனுக்கே உண்டு என்று பதில் சொன்னார். இப்போது வேறு ஒரு ஆர்வம் மிக்க கேள்வி எங்களுக்கு தோன்றியது.

உங்கள் வாழ்வில் தனிப்பட்ட ரீதியிலோ அல்லது பொதுவாகவோ சில சம்பவங்கள் நடக்க போவதாக ஆவிகள் கூறியது உண்டா? எச்சரித்தது உண்டா? என்று கேட்டோம்.

அதற்கு நிறைய சம்பவங்களை என்னால் கூற முடியும். இருந்தாலும் ஒன்றை கூறுகிறேன் என்று தனது அனுபவத்தை எங்களோடு பகிர்ந்து கொள்ள துவங்கினார்.

மந்திரத்தால் நல்ல ஆரோக்கியத்தோடு இருக்கின்ற மனித உடம்பில் படிப்படியாக விஷத் தன்மையை ஏற்றி அவனை செயலிழக்க செய்துவிடலாம் அல்லது கொன்றும் விடலாம் அப்படிப்பட்ட மந்திரத்தை முறியடிப்பதற்கு மாற்று மந்திரம் உண்டு. நான் அந்த மாற்று மந்திரத்தை அறிந்து கொள்ளவும், கற்று கொள்ளவும் மிகவும் ஆசைபட்டேன். முயற்சி செய்தேன். எல்லாமே தோல்வியில் தான் முடிந்தது. இதனுடைய வருத்தம் வெகு நாட்களாக எனக்கு தீரவில்லை.

இந்த வருத்தத்தை எனது நண்பர் வேலு நாயக்கரிடம் நான் பகிர்ந்ததுண்டு. ஒரு துரதிருஷ்டமான நிகழ்வு ஒன்றில் அவர் காலமாகி விட்டார்.

ஒரு முறை அவர் ஆவியோடு நான் பேசிய போது, நீ அந்த மந்திரம் வேண்டுமென்று முன்பெல்லாம் வருந்துவாயே அந்த மந்திரம் இன்ன ஊரில் இன்னாரிடம் இருக்கிறது. இவரை அணுகினால் அவர் உனக்கு பெற்று தருவார் என்று கூறினார்.

அவரது கூற்றுப்படி நான் நடந்து கொண்டு அந்த அரிய, அபூர்வ மந்திர ஏட்டை பெற்றேன். அதில் நான் தேர்ச்சியும் பெற்றிருக்கிறேன் என்றால் அதற்கு வேலுநாயக்கர் ஆவிக்கு நன்றி செலுத்த வேண்டும். உயிரோடு வாழ்ந்த போது செய்ய முடியாத உதவியை இறந்த பிறகு அவர் செய்தார் என்பது ஒருபுறம் இருக்க, ஆவிகளால் இத்தகைய வியப்பான காரியங்களை நடத்த முடியும் என்பதை அனுபவ ரீதியில் அறிந்து கொண்டேன். நன்மையான



யோகி ஸ்ரீ ராமானந்த குரு




விஷயங்கள் ஆவியின் மூலம் பெற்றிருப்பது போலவே, பல தீமைகளையும் பெற்றிருகிறேன். நான் ஆத்ம சாந்தி இல்லாமல் தவிக்கிறேன் என்று என்னிடம் முறையிட்ட பல ஆவிகளுக்கு கிரிகைகள் செய்ய போய் உடல் ரீதியிலும், மன ரீதியிலும் சங்கடங்களை சந்தித்திருக்கிறேன். தீமையை மறந்து நன்மைகளை மட்டுமே பேச வேண்டும் என்பதனால் நாயக்கரின் உதவியை இங்கு குறிப்பிட்டேன்.

குருஜி கூறியவற்றில் சிலவற்றை அவரோடு இருந்து நாங்கள் நேரில் அனுபவித்திருக்கிறோம். ஒருமுறை அவர் சொந்த ஊருக்கு அருகிலுள்ள உவரி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு, அவரோடு சென்றோம். ஆலயத்தின் கொடி மரத்தை எங்கள் கார் கடக்கும் போது, காரணமே இல்லாமல் நின்றுவிட்டது. ஐந்து நிமிடம் நின்றிருக்கும் என்று நினைக்கிறோம். அதன் பிறகு கடற்கரைக்கு மிக அருகில் சென்று உட்காரலாம் என்று நினைத்தோம். குருஜி மறுத்தார் உடனடியாக வண்டியை தன் பூர்வீக வீட்டிற்கு விடு என்றார்.

வீட்டிற்கு வருவதற்குள், குருஜிக்கு பலமுறை வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. மிகவும் கஷ்டப்பட்டார். ஐந்து கிலோ மீட்டர் பயணம் செய்வதற்குள் களைத்து போய்விட்டார். வீட்டிற்கு வந்ததும், சகஜமான உற்சாகத்திற்கு வந்துவிட்டார். எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. காரணம் கேட்டோம். அதற்கு அவர், அந்தோனியார் ஆலயத்தின் கொடிமரத்தின் கீழே கட்டப்பட்டு பல ஆண்டுகளாக பல ஆவிகள் அவதிப்பட்டு கொண்டிருந்தன. அவைகள் நமது காரின் இயக்கத்தை நிறுத்தி, தன்னை விடுவிக்குமாறு மன்றாடின. அவைகளின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்து, உணர்ச்சி வேகத்தில் மந்திரத்தை சொல்லி விடுவித்தேன். அதனுடைய விளைவு தான் வயிற்று கோளாறு என்று சிரித்து கொண்டே பதில் சொன்னார்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434



# விரதம்

வாரம் ஒரு நாளோ, மாதம் ஒரு நாளோ விரதம் இருப்பது உடலுக்கு நல்லது' இந்தியாவில் இருக்கும் பல கோடி மக்களின் நம்பிக்கை இதுதான். ஆனால் அதில் உள்ள நன்மை, தீமைகளைப் புரிந்து கொள்ளாமலே பலர் விரதம் இருக்கிறார்கள்.

ஒரு சிலர் நோஞ்சானாக இருப்பார். "நான் இன்னைக்கு பச்சைத் தண்ணி கூட குடிக்க மாட்டேன்.. விரதம் இருக் கேன்' என்பார். யார் யார்? எது எதற்கு? எப்படி? விரதம் இருப்பது? என்ற முறை உள்ளது. அது தெரியாமல், உடல் ஆரோக்கியத்திற்கு உலை வைக்கும் அளவிற்கு கண்மூடித் தனமாக விரதம் இருக்கிறார்கள். அது பெரிய ஆபத்தில் கொண்டு போய்விடும் என்பது இவர்களுக்கு தெரிவதில்லை.

ஒரு நாள் வயிறைக் காயப் போட்டால் உடல் உறுப்புகளில் உள்ள கழிவுகள் சுத்திகரிக்கப்படும். ஜீரண மண்டலத்திற்கு ஓய்வு கொடுத்தால் உடல் புத்துணர்ச்சி பெறும் என்பது உண்மைதான். ஆனால் அது முறைப்படி விரதம் இருப்பவர் களுக்குதான்.

### எந்த வயதினர் விரதம் இருக்கலாம்?

15 வயதுக்குக் குறைவானவர்கள், 70 வயதைக் கடந்தவர்கள், கடுமையான உடல் உழைப்பு உள்ளவர்கள், வெளியூரில் வேலை செய்பவர்கள், கர்ப்பிணிகள், நோயாளிகள் தொடர்ந்து மருந்து உட்கொண்டு வருபவர்கள் ஆகியோர் எந்த வகையான விரதமும் இருக்கக் கூடாது. விரதம் இருக்கும் போது, நம் உடலில் உள்ள உயிரி ரசாயனங்கள் வயிற்றுக்குக் கேடு விளைவிக்கக் கூடும்.

### நீண்ட நாட்கள் விரதம் இருந்தால் என்னாகும்?

நாம் உண்ணும் உணவானது முதலில் குளுக்கோஸாகவும் கொழுப்பாகவும் அமிேனோ அமிலமாகவும் பிரித்து எடுக்கப்பட்டு விடும். இதில் குளுக்கோஸ்தான் மிக முக்கியம். நம் உடலுக்குத் தேவையான சக்தி இதிலிருந்துதான் எடுக்கப்படுகிறத. இப்போது நீங்கள் விரதம் இருக்கிறீர்கள்.

சிறிது நேரத்தில் சோர்வு தட்டும். அதாவது சக்தி இழக்க நேரிடும். அந்த சக்தியை உடல் சேமித்து வைத்துள்ள குளுக்கோஸை கரைத்துத்தான் உடலானது எடுத்துக் கொள்ளும். குளுக்கோஸை தீர்ந்த பின்னர் உடலில் உள்ள கொழுப்பை எடுத்துக் கொள்ளும்.

இவை இரண்டும் தீர்ந்த பின்னர் அதீத பசி எடுக்கும். அப்போதும் உணவு உண்ணாமல் விரதத்தைத் தொடர்ந்தால் தசைகள் வளர்சிதை மாற்றமடைந்து, தோல் சுருங்கி முகம் வாடத் தொடங்கிவிடும்.

உடலில் எலக்ட்ரோலைட் குறைந்துவிடும். இதனால் இதயம் வேகமாகத் தாறுமாறாக துடிக்கத் தொடங்கும். சிறுநீரகம் சரிவர வேலை செய்யாமல் போய்விடும். மேலும் பட்டினி தொடர்ந்தால் மரணம் கூட சம்பவிக்கும்.



### விரதம் இருப்பது நல்லதா? கெட்டதா?

கொழுப்பையும் இரத்தத்தையும்சுத்திகரிக்க விரதம் இருப்பத நல்லது என்றே இப்போது ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர். மேலும் புற்றுநோய், இதய நோய், நீரிழிவு நோய், நோய் எதிர்ப்புக் குறைபாடு ஆகிய குறைகளை நிவர்த்தி செய்யலாம் என்கிறார்கள்.

### உடல் எடையைக் குறைக்க விரதம் இருக்கிறார்களே அது சரியா?

உடல் எடையைக் குறைக்க விரதம் இருப்பது சரியல்ல. உணவு சாப்பிடாத அந்த நாட்களில் அவர்கள் கோபப்படுவதும் எரிச்சலடைவதும்தான் அதிகரிக்கும் இதனால் உடலில் வளர்சிதை மாற்றம் பாதிக்கப்படுகிறது. விரதம் முடிந்த பின்னர் பசியை அடக்க அதிகளவு உணவை உண்ணத் தொடங்கிவிடுகிறார்கள். அது அவர்களை மேலும் உடல் எடையைக் கூட்ட வைக்கிறது.

### சரி, விரதம் எப்படி இருந்தால் நல்லது?

1. குறைந்தளவு உணவு அதாவது ஒருவேளை அல்லது இரு வேளை சாப்பிடாமல் விரதம் இருப்பது நல்லது. இதனால் உடலின் இன்சுலின் சுரப்பது, கொழுப்புச் சத்து குறைவது, எடை குறைவது ஆகிய நன்மைகள் ஏற்படும்.
2. மன அழுத்தம், சோர்வு நீங்க குறைந்தபட்ச அளவில் வயிற்றைப் பட்டினி போடுவது நல்லது.
3. தண்ணீர் கூட குடிக்காமல், விரதம் இருக் கக் கூடாது. உடலில் உள்ள கழிவுகளை அகற்றும் பணியை தண்ணீர்தான் செய்யும். தண்ணீர் குடிக்காமல் விரதம் இருந்தால், கழிவுகள் உடலிலேயே தங்கிவிடும்.
4. பெண்கள் மதம், பக்தி, நம்பிக்கை அடிப்படையில் அடிக்கடி விரதம் இருப்பது கூடாது. அது ரத்தசோகை நோயை உண்டாக்கும். சிலருக்கு சர்க்கரை நோய் வர அதுவும் ஒரு காரணமாகிவிடும்.
5. வாரமோ மாதமோ ஒருநாள் குறைந்த அளவு உணவை எடுத்துக் கொண்டு விரதம் இருப்பதே நல்லது. அது உடலில் சில செல்களை வளர்ச்சியடையச் செய் யும். பழுதடைந்த செல்கள் புத்துயிர் பெறும். அதனால் இளமையுடன் இருக்க முடியும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

# ஸ்ரீ ஸ்வாமி ஸமர்த்தர்

## ஸ்ரீ தத்த அவதாரங்கள் - 3

எப்பொழுதெல்லம் அதர்மம் தலைதூக்குகிறதோ அப்பொழுதெல்லம் இறைவன் தன்னை வெவ்வேறு ரூபங்களில் இந்த பூமியில் சனாதன தர்மத்தை காக்க அவதாரம் புரிகின்றார். அப்படியொரு புண்ணிய அவதாரம்தான் ஸ்ரீ ஸ்வாமி ஸ்மார்த்த அவதாரம். அவதூத ஞானி. கௌபீனம் மட்டுமே அணிந்து திகம்பராய் வாழ்ந்தவர்.

இவர் தத்தாத்ரேயரின் மூன்றாவது அவதாரமாக கருதப்படுகிறார்.

தத்தாத்ரேய வழிபாடு மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவில் மிக மிக அதிகம். அதற்குக் காரணம் இந்த இரண்டு மாநிலங்களில் மட்டுமே தத்தாத்திரேய அவதாரங்களாக பல மகான்கள் இருந்துள்ளார்கள் என்பதே.

இவர் மஹாராஷ்டிராவிலுள்ள 'அக்கல்கோட்' என்னும் இடத்தில் பெரும்பான்மையான வருடம் இருந்ததால் 'அக்கல்கோட் மஹராஜ்' என்றும் அழைக்கப்படுகிறார். அக்கல்கோட் என்னும் இடத்தை 22 வருடங்களாகத் தம் வசிப்பிடமாக இந்தச் சத்குரு தேர்ந்தெடுத்துக் கொண்டதனாலும், 1878இல் அங்கேயே அவர் மகாசமாதியும் அடைந்ததனாலும், அவர் 'அக்கல்கோட் மகராஜ்' என்றும் அழைக்கப்பட்டார். மகாராஷ்ட்ராவிலுள்ள ஷோலாப்பூர் மாவட்டத்தில் ‘அக்கல்கோட்’ அமைந்துள்ளது.

இவரின் காலம் சரியாக அறிய முடியவில்லை. இருப்பினும் சில அனுமானங்களினால் அறியமுடிகிறது. ஸ்ரீ தத்தரின் இரண்டாவது அவதாரமான ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஸ்வாமிகள் பஹுதான்ய ஸம்வத்ஸரத்தில் (1458கி.பி) பிரஹஸ்பதி கன்னியிலிருக்க, மாக மாசம் கிருஷ்ணபக்ஷம் பிரதமை வெள்ளிக்கிழமை புண்ணிய தினத்தன்று ஸ்ரீ சைலம் மல்லிகார்ஜுனருடன் ஐக்கியமானார். 300 வருடங்கள் ஸ்ரீ சைலத்தில் ஸ்ரீ மல்லிகார்ஜுனத்தில் உள்ள கதலி வனத்தில் குப்தமாக இருந்து , அதன் பிறகு ஸ்ரீ சுவாமி சமர்த்தராக திரு அவதாரம் புரிகிறார். ஆதலால் இவர் ஸ்ரீ தத்தாத்ரேயரின் மூன்றாவது திருஅவதாரமாக கருதப்படுகிறார்.



300 ஆண்டுகள் தவ நிலையில் இருந்தபோது அவர்மேல் ஒரு பெரிய எறும்பு புற்று வளர்ந்து அவரை மறைத்தது. ஒருநாள் ஒரு மரம்வெட்டியின் கோடாரி மரம் வெட்டும்பொழுது தவநிலையில் இருந்த ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஸ்வாமிகள் மேல் தவறுதலாக விழுந்தது. கோடாரியின் வெட்டும் பாகத்தில் இரத்தக்கறை படிந்திருப்பதைக் கண்டு







எஸ்.ரகுராமன்

அவன் அதிர்ச்சியுற்றான். அந்தப் புற்றை சுத்தம் செய்து பார்த்தபோது, ஆ! அங்கு அவன் கண்டதென்ன? அவன் அங்கு ஒரு யோகி, மெதுவாகக் கண்திறந்து, வாயடைத்து நின்ற விறகு வெட்டியைச் சமாதானப்படுத்தி, அவருடைய குறிக்கோளைத் திரும்பவும் நிறைவேற்ற, அவர் மறுபடியும் இவ்வுலகில் தோன்ற வேண்டும் என்பது தெய்வ விருப்பம் என்றும் கூறினார். இந்த யோகி, இந்த புதிய அவதாரத்தில், 'ஸ்வாமி ஸமர்த்தர்' என்று அழைக்கப்பட்டார்.

எப்படி ஸ்ரீ சாய்பாபா தன்னுடைய இருப்பிடமாய் ஷீரடியை தேர்ந்தெடுத்தாரோ அதேபோல் ஸ்ரீ ஸ்வாமி ஸமர்த்தர் தன்னுடய நிரந்தர வாசஸ்தலமாக 'அக்கல்கோட்டை' தேர்ந்தெடுத்தார். இருவரும் வெவ்வேறு உடம்பிலுள்ள ஒரே ஜீவன்கள். ஜாதி மத பேதமின்றி அனைவருக்கும் தனது அருளை பொழிந்தார். இவருக்கும் ஷீர்டி சாய்பாபவிற்கும் நிறைய ஆச்சார்யமிக்க ஒற்றுமைகள்உண்டு. மிகவும் எளியவர். பக்தர்களுக்கு அனுக்கிரஹம் புரிவதில் வல்லவர். பக்தர்களின் பேராபத்துகளை நீக்கி அனுகிரஹிப்பதில் சமர்த்தர் ஆதலால்தானென்னவோ 'சுவாமி சமர்த்தர்' என்று அழைக்கப்படுகிறார்.

### அற்புதங்கள்

இவர் பெரும்பாலும் தனிமை விரும்பியாக இருந்தார். ஒரு சமயம் ஷோலாப்பூரிலுள்ள 'ஸ்ரீ தத்தரின்' ஆலயத்திற்கு சென்றார். இவரின் கௌபீன தோற்றத்தை கண்ட பூஜாரி இவரை தகாத வார்த்தைகள் கூறி அவமானப்படுத்தி அங்கிருந்து விரட்டினார். அதை பெரிதுபடுத்தாத ஸ்வாமிகள் அருகிலுள்ள தூணில் சாய்ந்து தத்தரை தியானித்தார். அங்கே வந்தபெண்மணி ஓர் விசித்திர காட்சியை கண்டாள்.

அங்குசமர்த்தருக்கு பதில் ஸ்ரீ தத்த பகவானை கண்டாள். உடனே பரவசநிலையை அடைந்து அங்கிருந்தவர்களிடம் இவர் சாதரணமானவர் அல்ல ஸ்ரீ தத்தரே இவரின் ரூபத்தில் வந்துள்ளார் என்று கூற அங்கிருந்த அனைவரும் தங்களின் தவறுக்கு வருந்தி இவரின் பாதத்தில் விழுந்து மன்னிப்பு வேண்டினர். சமர்த்தரும் அவர்களை காருண்யத்தோடு மன்னித்தார். மஹான்களுக்கு துக்கமும் அவமானமும் சுகமும் ஒன்றல்லவா!!!

அனந்த பாரதி என்னும் மீனவன் இவரின் பரம பக்தன். ஒரு சமயம் மீன் பிடிக்க படகில் சென்று திரும்பியபொழுது பலத்த சூறாவளி காற்றில் சிக்கித்தவிக்க, உடனே தனது குருவை அழைக்க சமர்த்தர் உடனே ஒரு விசித்திரமான செய்கை செய்தார் அதுமட்டுமன்றி அவர் உடல் முழுவதும் தண்ணீரால் திடீரென்று நனைந் ததை அறிந்த மக்கள் புரியாமல் விழித்தனர். ஆபத்தில் இருந்த தனது பக்தனை நடுக்கடலில் சென்று படகை தனது தலைக்குமேல் உயர்த்தி அவனை ரக்ஷித்து அந்தர்த்யானமானார். தான் காப்பாற்றப்பட்டதையறிந்த அவன் உடனேஸ்வாமிகளின் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்து தனது நன்றியை வெளிப்படுத்திய பிறகுதான் அனைவருக்கும் அவரின் விசித்திர செய்கையின் தாத்பர்யம் புரிந்தது.

ராம்பூரை சேர்ந்த 'ராவாஜி' என்னும் பக்தன் ஒரு சமயம் சுவாமி தனது ஊருக்கு வருவதை அறிந்து அவருக்கு தகுந்த மரியாதையுடன்அழைத்து உணவு அளிக்க விரும்பினான். அவனின் நிர்மலமான தூய பக்தியில் மகிழ்ந்த ஸ்வாமிகள் அவனை அனுகிரஹிக்க திருவுள்ளம் கொண்டு அந்த ஊரிலுள்ள அனைவரையும் உணவு உண்ண அழைத்தார். அதை கண்டு கதி கலங்கி நின்றார் அந்த பக்தர். ஏனென்றால் அவர் படைத்த உணவு அதிக பக்ஷமாக 50 பேருக்கு மேல் உண்ண முடி யாது. ஸ்வாமிகளை காணும் ஆவலில் அவரோடு உணவு உண்ண ஆயிரக்கணக்கான மக்கள் வந்தனர்.

தந்து பக்தனின் தர்மசங்கடமான நிலையை அறிந்த அம்மஹான், உடனே அவனை அழைத்து உணவுள்ள அண்டாவில் அன்னபூரணியின் சிறு விக்ரஹத்தை உள்ளே வைத்து ஒரு துணியினால் மூடி எக்காரணத்தைக்கொண்டும் துணியை முழுவதும் விலக்காமல், துளசிமாடத்தை வலம்வந்து பரிமாறும்படி பணித்தார். அவரும் அவ்வாறே செய்ய என்ன ஆச்சர்யம் அவர் பரிமாற பரிமாற உணவானது அக்ஷயபாத்திரம்போல் குறையாததை கண்ட ராவாஜி, மஹானின் கருணையை கண்டு மெய்சிலிர்த்து அவரின் பாதத்தில் நெடுஞ்சாண்கிடையாய் வீழ்ந்தார். இதேபோல் ஓர் சம்பவம் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியின் சரிதத்தில் இடம்பெறுகிறது. இதுவொன்றே இவர் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியின் மறு அவதாரம் என்பதற்கு சான்றாக விளங்குகிறது.

ஒரு சமயம் இவரின் பரம பக்தரான 'வாமன் புவா படேகர்' என்னும் பக்தர் ஜகதாம்பா என்னும்

தேவியாலயத்திற்கு சென்று அம்பிகையை மனமுருகி துதித்தார். அக்கோயிலின் பூஜாரி சமர்த்தரை ஏளனம் செய்வதையே வழக்கமாக கொண்டிருந்ததார். வாமனை அவமானப்படுத்த நினைத்து உங்கள் சமர்த்தர் அதிசயங்கள் புரிவதில் வல்லவராமே !!! அப்படியென்றால் இதோ இந்த அம்பிகையின் கழுத்திலுள்ள மலர்மாலையை உங்களின் கழுத்தில் விழ செய்யுங்கள் பார்க்கலாம் என்று கூற கூடியருந்தவர்கள் அவரை எள்ளி நகையாடினர். அவமானத்தின் மிகுதியால் அப்பக்தர் ஸ்ரீ ஸ்மார்த்தரை மனமுருகி வேண்ட என்ன அதிசயம் அம்பிகையின் கழுத்திலுள்ள மலர் மாலை பல பேர் முன்னிலையில் வாமனின் கழுத்தில் விழுந்தது. ஏளனம் செய்தனைவரும் பூஜாரி முதற்கொண்டு வெட்கி தலைகுனிந்து அவரிடம் மன்னிப்பு கோரினர்.

'பாபா சாஹேப் ஜாதவ்' என்னும் பரம பக்தனின் வேண்டுகோளை ஏற்று அவனின் மரணத்தை சற்று தள்ளி, நீண்ட ஆயுளை அளித்தார். ப்ரஹ்மாவின் தலை எழுத்தை மாற்றும் வல்லமை கொண்டவர் ஸ்ரீ தத்தர். அவரின் அவதாரமான ஸ்ரீ சமர்த்தர் அவ்விதம் செய்ததில் ஒன்றும் வியப்பில்லையே !!!!. குரு ஒருவரால்தான் ப்ரம்மாவின் தலை எழுத்தை மாற்றும் வல்லமை உண்டு.

ஒரு ஏழை ப்ராமணத்தம்பதியர் அவரிடம் தங்களின் ஒரே வாரிசான அன்பு மகன் பிறவியிலேயே கண் பார்வை அற்றவனாக இருந்தான். அவனுக்கு பார்வை அளிக்கும்படி வேண்ட, அச்சமயம் அங்கே சில திமிர்பிடித்த ப்ராஹ்மண பண்டிதர்கள் தான் மெத்த படித்த செருக்குடன் அவரை வாதத்தினால் அவமானப்படுத்த இது ஒரு நல்ல வாய்ப்பாக கருதினர். தனது ஞான த்ருஷ்டியினால் அறிந்த சமர்த்தர், கண் பார்வை அற்ற சிறுவனை அழைத்து ஆர தழுவி அவனின் காதில் சில மந்திரங்களை ஓதினார். என்ன ஆச்சர்யம் அச்சிறுவன் வீறு நடைபோட்டு அப்பண்டிதர்களிடம் வேதம், புராணம், உபநிஷதம் என்று அனைத்தையும் விளக்கி அப்பண்டிதர்களின் செருக்கை அகற்றினான். அனைத்து மக்களும் இவ்வரிய நிகழ்ச்சிகளை கண்டு மெய்மறந்து இருந்தனர். அப்ப்ராமண தம்பதியர் அவரின் பாதத்தில் சிரம் தாழ்த்தி தங்களின் கண்ணீரினால் அபிஷேகம் செய்து தங்களின் நன்றி கடனை தீர்த்தனர். என்னே ஒரு மஹிமை!!!!

ஒரு பண்டிதரின் உடலில் உள்ள துர் ஆவியை தனது யோகசக்தியினால் நீக்கி அந்த துர் ஆவிக்கு நற்கதி அளித்து அப்பண்டிதனை நல்ல நிலைக்கு ஆளாக்கினார்.

ஒரு ஏழை பெண்மணிக்கு புத்திர பாக்கியம் அளித்து அவளின் மிக எளிமையான பிரசாதத்தை ஏற்று தான் பக்த பராதீனன் மற்றும் உண்மையான மற்றும் எதிர்பார்பற்ற எளிமையான பக்திக்கு மட்டுமே கட்டுப்பட்டவன். டாம்பீகத்திற்கும், ஆடம்பரத்திற்கும் தான் காட்டுப்பட்டவனல்ல என்றும் அவ்விரண்டினிலுருந்து சற்று விலகியிருப்பவன் என்பதை இச்சம்பவத்தின் மூலம் மக்களுக்கு தெளிவுபடுத்தினார்.

இவ்வாறு கணக்கிலடங்கா மகிமைகளையும் அற்புதங்களையும் புரிந்துள்ளார்.

முக்தி

சுவாமி சமர்த்தர் தம் உடலை விட்டு நீங்குவதற்கு முன், கேசவ் நாயக் என்ற பக்தர் மிகுந்த உணர்ச்சி வசப்பட்டு ' மகாராஜ், நீங்கள் செல்வதால் எங்களுக்கு யார் பாதுகாப்பு அளிப்பார்கள்? ' எனக் கேட்டார். சுவாமி சமர்த்தர் தம் பாதுகைகள் ஒரு ஜோடியை வணங்குவதற்காக அவருக்கு அளித்தார். ' இனிவருங்காலங்களில், அஹமது நகர் மாவட்டத்திலுள்ள ஷிர்டியில் நான் தங்கியிருப்பேன் ' எனக் கூறினார். இன்னொரு பக்தரான கிருஷ்ணா அலி பாக்கர், அக்கல்கோட்டுக்குச் சென்று சுவாமி சமர்த்தரின் பாதுகைகளை வழிபடத் தீர்மானித்தார். அப்போது சுவாமி சமர்த்தர் அவர் கனவில் தோன்றி ' நான் இப்போது ஷிர்டியில் தங்கியுள்ளேன் ' அங்குச் சென்று என்னை வழிபடு. எனக்கூறினார். பாக்கர் சீரடி சென்று ஆறு மாதம் அங்குத் தங்கினார். பின்னர், அவர் ஸ்ரீ சாயியிடம் விடைபெற்றுக்கொண்டு மீண்டும் அக்கல்கோட் செல்ல விரும்பியபோது, ஸ்ரீ சாயி, ' அக்கல்கோட்டில் என்ன இருக்கிறது ? அக்கல்கோட் மஹராஜ் இங்கு வசித்துக் கொண்டிருக்கிறார்' என்று கூறினார்.

ஷாக்கா 1800, சைத்ர சுதா திரியோதசி அதாவது கி.பி. 1878 ஆம் வருடத்தில், ஒரு செவ்வாய்க்கிழமை, மாலை 4 மணி. அந்நேரத்தில் அவர் பத்மாசனத்தில் அமர்ந்துகொண்டு அவருடைய இறுதி மொழிகளைக் கூறினார். ' யாரும் அழக் கூடாது ' நான் எப்பொழுதும் எல்லா இடங்களிலும் இருப்பேன். பக்தர்களின் ஒவ்வோர் அழைப்பிற்கும் பதிலளிப்பேன். ஸ்ரீ சாயிபாபாவும் மகாசமாதி அடைவதற்கு முன் இதையேதான் கூறினார்.

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593





# இறப்பு வீட்டினர் கோவில் வழிபாட்டை ஓராண்டு ஏன் ஒதுக்குகின்றனர்

இறப்பு சம்பவம் நடைபெற்ற குடும்பத்தினர் ஓராண்டு கோவில்களுக்கு செல்லக்கூடாது என்பது ஒரு இடைச் சொருகல் தகவல்தானே தவிர இதை எந்த இந்து மத சாஸ்திரதவறான வழக்கம் சந்ததிகளைத் துன்பத்தில் ஆழ்த்தி விடும் ...!

எவரேனும் இறந்துவிட்டால் அக்குடும்பத்தினர் ஒரு வருடத்திற்குக் கோலம் போட கூடாது, மலைத் தலத்திற்கும் போகக் கூடாது, பண்டிகைகளை கொண்டாடக் கூடாது என்ற தவறான வழக்கங்கள் தற்போது நிலவி வருகின்றது.

இறப்பு நேரிட்ட நாளிலேயே கூட அக்குடும்பத்தினர் கோயிலுக்குச் சென்று வழிபடுவதிலும், வீட்டில் கோலம் இடுவதிலும் எவ்விதத் தவறும் இல்லை, சாஸ்திர முரண்பாடும் கிடையாது.

இடைச் செருகலாக வந்த இத்தவறான வழக்கமே பல குடும்பத்தவர்களை, ஒரு வருட காலம் கோயிலுக்குச் செல்ல விடாமல் தடுப்பதோடு, அக்குடும்பத்தினருக்கு எவ்வித ஆலய வழிபாட்டுப் பலாபலன்களையும் வரவிடாது ஓராண்டிற்குத் தடுப்பதால் அக்குடும்பத்தினரின் பல துன்பங்களுக்கு நிவர்த்தி கிட்டாமல் போவதுடன் ஆன்மீகத் தற்காப்பு சக்தியும் குறைந்து பலத்த பிரச்சனைகளும் தோன்றி சந்ததிகளை அலைக்கழித்துவிடும்!

இந்த ஒரு வருடத்திலும் பண்டிகைகள் கொண்டாடுவதிலும் எவ்விதத் தவறும் இல்லை. பண்டிகைகளினால் வரும் புண்ய சக்தி சேகரிப்பையும் இழத்தலும் தவிர்க்கப்படும்.

அவ்வாறு துக்கத்தை ஒரு வருடகாலம் அனுஷ்டிப்பதனால் டி.வி, சினிமா, செய்தித்தாள் படித்தல், புது ஆடைகள், ஸ்வீட்டுகள், காபி, டீ, ருசிகர உணவுகள் , கேளிக்கைகளை ஒரு வருட காலம் எவரேனும் ஒத்தி வைகிறார்களா?



இறைவனா ஓராண்டு தன்னைக் காணலாகாது என்று விதிப்பார்?

இறைப் பகுத்தறிவுடன் சிந்தியுங்கள்! துன்பங்கள் மலை மலையாய்ப் பெருகும் கலியுகத்தில், அதுவும் பல பூஜைகளும், வேத சக்திகளும் வெகு வேகமாக மறைந்து வரும் கலியுகத்தில், "ஓராண்டு கோயிலுக்குச் செல்லலாகாது" என்ற அறியாமையினால் தோன்றிய தவறான எண்ணத்தைக் கட்டாயம் சமுதாயத்தில் இருந்து அகற்றியே ஆக வேண்டும்.

– நன்றி

ஸ்ரீ அகஸ்தியர் விஜயம்

www.aanmeegamalar.com

# ஆன்மீக வழியில் அமைதி

## 6

மனிதன் தனக்கு வரும் துன்பங்களைக் கண்டு கவலையுடன் இருந்து விடக்கூடாது. உலகில் கவலையே இல்லாதவர்கள் யார் என்று சிந்தித்துப் பார்த்தால், ஒன்று குழந்தை மற்றொருவன் பைத்தியகாரன். மனிதனுடைய அமைதிக்கு முதல் எதிரி இந்தக் கவலைகள்தான் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் கவலைகள் மனிதனின் வாழ்வை சீரழித்து உடல் ஆரோக்கியத்தையும் கெடுத்து விடும். எனவே மனிதன் தனக்கு வந்த துன்பங்களைப் பற்றி சிந்தித்து, அந்த துன்பத்திற்கு காரணம் என்ன எப்படி என்பதைக் கண்டறிந்து அதன் வழியே சென்று தீர்வு காண முயற்சி செய்ய வேண்டும். துன்பங்களுக்குக் காரணம் ஆசை என்று புத்தர் கூறியுள்ளார்.

ஆனால் மனிதனுடைய துன்பங்களுக்கு காரணம் அவனது கர்மவினைகள்தான் என்று இந்து மதம் கூறுகிறது. இதனை 'தீதும் நன்றும் பிறர் தரா வராது' என்று கூறியுள்ளனர். மனிதன் தான் செய்த கர்ம வினைகள் தீர்ந்தவுடன் அவனது கவலைகளும் அவனை விட்டுப் போய்விடும் என்றும் கூறுகிறது.

கர்மவினைகள் தீரும்வரை கவலையில் மூழ்கி விடாமல் நீ பொறுமையுடன் இருக்கும்படி, ஞானிகள் சித்தர்கள் கூறியுள்ளனர். உனது துன்பங்களுக்கு காரணம் நீ செய்த கர்ம வினைகள்தான் காரணம் என்று அறிந்து தெளிவு பெற்று விட்டால், துன்பங்களைக் கண்டு நீங்கள் துவண்டு விட மாட்டீர்கள். மேலும் இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை என்று மனதை பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும். மனபக்குவம் பெறுவதற்கும் கவலைகளை மறந்து நாம் அமைதியுடன் வாழ்வதற்கும் ஆன்மிகம் வழி காட்டுகிறது.



இந்தப் பிரபஞ்சம் முழுதும் மின்காந்த அலைகளால் நிறைந்துள்ளது. வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி , பூமிக்கும் விண்வெளிக்கலத்துக்கும் ஏற்பட்டுள்ள தொடர்புகள் எல்லாம் ஆகாயம் முழுதும் பரவியுள்ள மின்காந்த அலைகளினால் அவைகள் இயங்குகிறது. தொடர்பு சாதனைகள் மூலம் நாம் வாழ்வில் பல பயன்களைப் பெற்று வருகிறோம். அதேபோல் நமது மனதில் தோன்றும் எண்ண அலைகளும் பிரபஞ்சம் முழுதும் சுற்றிக் கொண்டே இருக்கிறது. நம் மனதில் ஏற்படும் எண்ண அலைகள் பிரபஞ்ச சக்தியுடன் கலந்து மீண்டும் நம்மிடம் வந்து அதற்குரிய பலன்களை கொடுக்கும்.

எனவே நம் மனதில் தோன்றும் எண்ணங்கள் நல்லவைகளாக இருந்தால் அந்த எண்ண அலைகள் நமக்கு நல்லது நடக்கும்படி செய்கிறது. நமது எண்ணங்கள் தீயவைகளாக இருந்தால் அவை பிரபஞ்ச சக்தியுடன் கலந்து சுவரில் அடித்துவிட்ட பந்துபோல் மீண்டும் நம்மையே ஏதோ ஒரு வடிவில் வந்து தாக்கித் துன்புறுத்துகிறது. இதனை வினை விதைத்தவன் வினை அறுப்பான் தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள். வினை என்றால் செயல் என்பதாகும். மனிதன் எந்தவொரு செயலையும் செய்ய வேண்டுமெனில் மனதில் அந்த செயலைப் பற்றி எண்ண வேண்டும். எண்ணிய பிறகுதான் அது செயல் வடிவம் பெறுகிறது. மனிதனுக்கு ஏற்படும் இன்பங்கள் துன்பங்களுக்கு எல்லாம் அவன்தான் காரணம் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் சோகங்களும் சுகங்களும் இருக்கின்றன. மனிதன் அறிந்தும் அறியாமல் எண்ணக்கூடிய தீய எண்ணங்களும், எண்ணியபடி தீய செயல்களைச் செய்வதாலும் அவன் துன்பங்களை அனுபவிக்கிறான். அவ்வாறு அவன் அடைந்த துன்பங்களினால் பெறப்பட்ட அனுபவங்கள் மூலம் கிடைத்த பாடங்கள் அவனை நல்லவழியில் நடத்திச் செல்கிறது. சாதுக்கள் ,ஆன்மீக அன்பர்கள் கூறும் அனுபவங்களை அறிந்தும், தன்னுடைய கீழான எண்ணங்களை செயல்களையெல்லாம் நீக்க வேண்டும்.

தனக்கும் பிறருக்கும் நன்மை தரக்கூடிய நல்ல எண்ணங்களையும் ஆன்மீகச் சிந்தனைகளையும் தன்னோட மனதில் நிரப்பிக் கொள்ள வேண்டும். மனிதன் தன்னோட மனதில் நல்ல எண்ணங்களை வளர்த்து செயல்படும்போது, மனதில் அமைதி தானாக வருவதை உணர்ந்து கொள்ளலாம். மனிதன் தன்னை நல்லவனாக மாற்றிக் கொள்வதற்கும் செயல்படுவதற்கும் மனிதர்களுக்கு மட்டுமே அத்தகைய ஆற்றல் உள்ளது. இதனை நாம் அனுபவங்களின் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அவனையும் அறியாமல் ஏதாவது ஒரு இலட்சியம் மனதில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. உயர்வான இலட்சி யங்களை நமது புராண இதிகாசங்கள் உபநிடதங்கள் மூலம் அறிந்து கொள்வதோடு, இராமகிருஷ்ணர், விவேகானந்தர், சாரதாதேவி, வள்ளலார் போன்ற அவதார புருஷர்களின் அமுதமொழிகளை நமது மனதில் பதிய வைத்து கொள்ள வேண்டும். அதன் மூலம் உயர்வான இலட்சியங்களை வளர்த்து, மனதை தெளிந்த நீரோடையாக்க வேண்டும். தெளிந்த மனதில் துன்பத்தின் ரேகைகள் படிவதில்லை. நாம் விரும்பும் தேடும் அமைதி அப்போது தானே வரும்.

சில மனிதர்கள் ஏதோ ஒரு பொருளைத் தொலைத்துவிட்டு, என்ன பொருளைத் தொலைத்து விட்டோம் என்பதுகூடத் தெரியாமலே தேடிக் கொண்டே இருப்பார்கள்.

அவர்களிடம் கேட்டால் 'என்ன தேடிக் கொண்டு இருக்கிறீர்கள்' என்று கேட்டால். 'ஏதோ என்னிடம் உள்ள ஒரு பொருளை மறந்து ஏதோ ஓரிடத்தில் வைத்து விட்டேன் அதனைத்தான் இப்போது தேடிக்கொண்டு இருக்கிறேன்' என்று கூறுவார்கள்.

அவர்கள் கூறுவது வேண்டுமானால் பைத்தியக்காரத்தனமாக இருக்கலாம். ஆனால் உலகில்


ஆன்மிகமலர் மெயில் புக்


• ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்


எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் ஏதோ ஒரு பொருளை இலட்சியத்தை அவர்களையும் அறியாமலே தொலைத்துவிட்டு, அவர்களது மனமானது அறிந்தும் அறியாமல் உலகில் அதனைத் தேடிக் கொண்டுதான் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனின் மனமும் இயல்பாகவே அமைதியைத் தேடிக் கொண்டுதான் இருக்கிறது. தேடுவது கிடைத்து விட்டால் அவர்கள் மனது அமைதி அடைந்து விடுகிறது.

ஒவ்வொரு மனிதனும் தனக்குள் தன்னை அறியாமல் தன்னிடம் இருக்கும் உயர்ந்த இலட்சியத்தை அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். அந்த முயற்சி ஆன்மீக சொற்பொழிவு, ஆன்மீக நூல்கள் படித்தல், தியானம், ஜபம் தவமாகவும் இருக்கலாம். மனிதன் தன்னோட இலட்சியத்தை மனம், வாக்கு செயல் போன்றவைகளில் ஆன்மீக வழியின் மூலம் முழு ஈடுபாட்டுடன் மனதை செலுத்த வேண்டும். அவ்வாறு மனதை செலுத்தும்போது எவ்விதத்திலாவது ஆன்மிகம் அவனையும் அறியாமல் அவனுக்கு அமைதிக்கான வாழ்வைக் காட்டிவிடும். இதனை உனது வாழ்வின் ஆரம்ப காலத்தில் அதாவது உடலும் உள்ளமும் நல்ல ஆரோக்கியமான நிலையில் இருக்கும்போது, அதற்கான முயற்சியினை மேற்கொள்ள வேண்டும். மனிதன் காலம் கடந்து ஆன்மீக வழியில் அமைதியைத் தேட முயற்சி செய்வது அதற்குள் அவனது வாழ்வே வீணாகி விடும். இதனை உணர்ந்து கொண்டு நாம் தேடும் உயர்ந்த இலட்சியத்தை அடைய மனம், வாக்கு, செயல் இவற்றின் மூலம் தீவிரமாக ஆன்மீக வழியில் விடாமுயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

இலட்சியம் என்றால் என்ன?. மனிதனுக்கு மனிதன் அவனுடைய இலட்சியங்கள் மாறும். இலட்சியங்கள் காலத்துக்கு காலம் மாறும். ஆனால் உலகில் அடிப்படையான ஆன்மீகக் கருத்துக்களான அன்பு, உண்மை, சத்தியம் தர்மம் நியாயம், மனிதநேயம் மட்டும் மாறுவதில்லை. ஒவ்வொரு மனிதனின் இலட்சியம் என்ன என்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், தர்மம் , அர்த்தக, காமஹ மற்றும் மோட்சம் என்ற நான்கு நிலைகளுக்குள்தான் அவனுடைய இலட்சியம் அடங்கும். அதாவது அறம், பொருள், இன்பம் வீடு என்ற நான்கு நிலைகளில்தான் அவனுடைய இலட்சியங்கள் என்பது அடங்கும். உன்னுடைய இலட்சியம் உயர்ந்ததாக இருக்கும்பட்சத்தில் அதன்படி நீ செயல்படும்போது ஆன்மீக வழியில் அமைதி கிடைக்கும்.

(அமைதி தொடரும்)

எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
கோட்டக் கலால் அலுவலர் (பணிநிறைவு)
கைபேசி: 9894043308

# பகவத் கீதையின் எட்டு அறிவுரைகள்

1. உன்னுடைய செயல்கள் தான் உனக்கு சொந்தமானது என்பதை உணர வேண்டும்
2. ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்
3. எல்லா செயல்களிலும் மிதமான போக்கை கடைப்பிடிக்க வேண்டும்
4. எல்லா உயிர்களும் சமம் என்பதை உணர வேண்டும்
5. எல்லாருக்கும் இறைவனே தந்தை, இயற்கையே அன்னை, உலகமே ஒரு குடும்பம் என்பதை உணர வேண்டும்
6. மனதை கட்டுப்படுத்த பழகிக் கொள்ள வேண்டும்
7. ஆன்மிக அறிவை அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்
8. ஒருவரின் வெளித்தோற்றத்தை வைத்து அவரை எடை போடக் கூடாது







# ஸ்வஸ்திக்

## வெற்றிக்கு நம்பிக்கைக்குரிய சின்னம்

இதுவரை ஸ்வஸ்திக் சின்னம் என்றால் ஒரு லாபகரமான, வெற்றியடைய வைக்கும் ஒரு நம்பிக்கைக்குரிய சின்னம் என்றுதான் நாம் அறிந்திருக்கிறோம் ஆனால் அந்த ஸ்வஸ்திக் சின்னத்திற்குள் அகில அண்டங்களும் அடங்கியுள்ளது என்பதை பெரும்பாலும் நாம் அறியாமல் இருக்கிறோம்.

இந்த ஸ்வஸ்திக்கினுடைய பாகங்கள் 4 ஒன்றுக் கொன்று சரி சமமாக 4 பிரிவுகளாக உள்ளது.. இந்த 4ம் நான்கு யுகங்களை குறிக்கும். நான்கு யுகங்களும் சரி சமமான பாகங்கள். ஒவ்வொரு யுகமும் 1250 வருடங்கள். நான்கு யுகங்களும் சேர்ந்து 5000ம் வருடங்கள். இந்த 5000ம் வருடங்களில் 2500 வருடங்கள் சுவர்க்கம். பிற்பகுதி 2500 வருடங்கள் உலகம் மெல்ல... மெல்ல.. கீழிறங்கி வருகின்றது. இந்த நான்கு யுகங்கள் முறையே சத்யுகம், த்ரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்றழைக்கப்பட்டு.. ஒவ்வொரு 5000ம் வருடங்களும் திரும்பத் திரும்ப இந்த பிறவி சக்கரம் இப்படியே சுற்றிவருகின்றது. இதில்தான் மனிதசரித்திரம் அரங்கேறுகின்றது அதாவது நாம் இப்பொழுது கலியுகத்தின் இறுதியில் இருக்கின்றோம். இந்த நேரத்தில் தான் அனை வரும். அனைத்து தர்மத்தினரும் இறைவனை நோக்கி கூப்பிட ஆரம்பிக்கின்றனர்.



ஏனென்றால் கலியுகத்தின் இன்னொரு பெயர் முழு கொடூரமான நரகம், அப்படியானால், மனிதனிடம் தீய செயல்கள் அதிகரித்து, நன்மையும், புண்ணியகாரியங்களும் குறைந்து பாவத்தின் மீது மனிதனுக்கு நாட்டம் அதிகரித்து செல்லும் யுகம் கலியுகம். இந்த கலியுகத்தில் அனைத்து தர்மமும் கீழான நிலை அடைந்து அதர்மத்தின் வசமாகின்றது.

இவ்வளவு அற்புதமான ஒரு கால நிலையை ஸ்வஸ்திக் குறியீட்டில் அடங்கியிருக்கிறது.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com




இதுவரை
வெளிவந்த
அனைத்து
இதழ்களையும்
எந்தவித
கட்டணமின்றி
முற்றிலும்
இலவசமாக
படிக்க










**aanmeegamalar.com**

இணையதளத்தை
பார்க்கவும்







